முரசொலி

–வார இதழ்–

ஆசிரியர்:
மு.கருணாநிதி

முரசு: 4 | 11–4–58 வெள்ளி | ஒலி 43

நமது 'ஸ்புட்னிக்கு'கள் !

இந்தியாவும் சிறிய 'ஸ்புட்னிக்குகளை'ச் செய்து அனுப்பமுடியும் என்று ஒரு விஞ்ஞானி குறிப்பிட்டார்.

★ கற்பனை உரையாடல் ★

இராவணனின் கண்ணீர்!

[இராவணன் உருவம் கொளுத்தப்படும் விழாவாகிய இராம நவமி வட இந்தியாவில் அண்மையில் கொண்டாடப்பட்டது!

இராவணனைச் சிறப்பித்து எழுதப்பட்ட இராவண காவியத்திற்குப் பச்சைத் தமிழர் ஆட்சியில் கூடத் தடை நீங்கவில்லை!

இராவணனைப் புகழ்ந்த நாடகங்களுக்குத் தடை மேல் தடை!

தூய தமிழ் நடைப் பேச்சுக்கு பெயர்போன இலங்கையிலே தமிழ் ஒழிப்பு இயக்கம் நடைபெறுகிறது! தமிழனையின் மானங் காக்க முயன்ற தன்மானமுள்ள தமிழர்கள், துப்பாக்கியால் சுடப்பட்டு பிணமாக்கப்படுகிறார்கள்!

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ட இராவணன் கண்ணீர் சிந்தி தமிழகத்துக்கு கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளான்.]

"நம் தமிழுக்கு அமிழ்தென்று பேர்! அந்தத் தமிழ்—இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!" என்று தமிழனையைப் போற்றி வாழ்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களே! தமிழ் நாட்டிலே புத்தாண்டு பிறக்கிறது! ஆனால் உள்ளத்திலே புத்தொளியைக் காண முடியவில்லை! உடலிலே புத்துணர்ச்சியைப் பார்க்க முடியவில்லை! எண்ணத்திலாவது புதுமை காணப்படுகிறதா வென்றால்...அதிலும் இல்லை! மொழிப் பற்று மாறி—மொழி வெறியாகி—அந்த மொழி வெறி மொழிப் பித்தாக மாற்றப்பட்டு—மக்களையெல்லாம் அது காட்டுமிராண்டிகளாக ஆட்டிவைப்பதைத்தான் காண்கிறேன்!

புத்தாண்டிலே ஏதாவதொரு ஆக்க வேலையிலே ஈடுபடுவதுதான் சிறந்தது...நல்லது!... ஆனால்.......தமிழர்களே!....... நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது!...கூறவே என் நாக்கு கூசுகிறது!....ஆனால்....அதை ...அந்தத் துரோகச் செயலை... இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு கூறிவிடுகிறேன்!...

தமிழர் வளர்த்த தமிழ்த் தீவிலே தமிழை அழிக்கும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது! "தேமதுரத் தமிழின் ஓசை தெருவெல்லாம்" முழங்கிய தென்னைமரத் தீவினிலே தமிழ் ஒழிப்பு இயக்கம் தோன்றியுள்ளது!

அன்று நான் இலங்கையை ஆண்ட காலத்திலே தமிழ் உலகம் முழுவதையும் அன்புப பிணைப்பால் கட்டி ஆண்டது! தமிழன் அன்று தலைநிமிர்ந்து நின்றான்!........ஆம்!......இது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை!.....அன்பினால்......அருளால்........அவனுக்கே உரிய உயர்ந்த பண்பாட்டால்...... இன்சொல்லால் அவன் உலகையே ஆண்டான்! கடல் கடந்தான்! கனிகள் தோண்டினான்! பொன்னும், மணியும் பிற பொருட்களையும் பார்ப்போர் வியக்கும் வண்ணம் தெருவிலே குவித்து வைத்தான்! நீலக் கடலின் அடித்தளத்திலே நீந்திச் சென்று முத்தெடுத்து முத்தாரம் தொடுத்து உரோமாபுரி அரசிகளை மயங்கச் செய்தான்! அவனது 'ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம்' அழகு மிக்க ஆரணங்குகளின் அங்கங்களிலே ஏறி அழகுக்கு அழகு செய்தது!

முத்தெடுத்த அதே கையால் போர் முரசை முழங்கச் செய்தான்! இலங்கையிலே வெற்றிச் சங்கு ஊதினான்! இமயத்திலே கொடி பொறித்தான்! கனக விசயர் தலையிலே கல்லேற்றிய அவன் கடாரத்தையும் வென்று களித்தான்!

ஐயோகோ! இன்று அந்தத் தமிழனின் நிலையையும், அவனது தாயாகியத் தமிழின் நிலையையும் எண்ணிப் பார்த்தீர்களா? துள்ளிவரும் வேலைத் தாங்கும் அவனது இதயம் இன்று துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்படுவதை எண்ணிப் பார்த்தால் என் கண்களிலே கண்ணீர் வருகிறது! ... என்றுமே எதற்கும்ம கலங்காத என் இதயம் இன்று கலங்குகிறது! கண்ணீரையே கண்டறியாத என் கண்களிலே கண்ணீர் பெருகுகிறது!... இன்பத் தேனைக் காதுகளிலே பாய்ச்சும் செந் தமிழனை அவமதிக்கப்படும்பொழுது... எந்த உண்மைத் தமிழன்தான் கண்ணீர் விடமாட்டான்?

என்னுடைய உருவம் ஒவ்வொரு ஆண்டும் வட இந்தியாவிலே கொளுத்தப்படுவது குறித்துக்கூட நான் வருந்தவில்லை!......ஆமாமடா, இலங்கைத் தமிழா! உன்னுடைய பழம் பெரும் மன்னனின் உருவம்தான் பண்டார நாயகாவின் நண்பரான பண்டிதர் நேரு ஆட்சியில் கொளுத்தப்படுகிறது! மதச் சார்பற்ற, உலகுக்கு அன்பு, அகிம்சையை உணர்த்தும் மகா புகழ் பெற்ற பஞ்சசில சர்க்காரின் ஆட்சியிலேதான் இந்த மாபாதகச் செயல் போலீசார் பாதுகாப்புடன் நடைபெறுகிறது! என் உருவத்தை எரித்தலிலே எல்லையில்லா இன்ப மடைகின்றனர் இந்த அகிம்சை தாசர்கள்! அன்பின் உருவங்கள்! அருட்ஜோதி வள்ளல்கள்! இன்னா செய்தார்க்கும் இனிதே செய்வதாக பறைசாற்றும் எத்தர்கள்!

என்னுடைய உருவம் கொளுத்—தப்படுவதைக் காண எத்தனை பக்தர்கள் கூட்டம் தெரியுமா? அதற்காக அடித்து மோதிக்கொண்டு ஓடோடி வந்து கூட்டத்திலே சிக்கி மோட்ச உலகை அடையும் இராம பக்தர்களின் எண்ணிக்கைதான் உங்களுக்குத் தெரியுமா?

இந்த இராம லீலா விழாவைச் சிறப்பித்து, தமிழகத்துப் பத்திரிக்கையிலேகூட ஒரு கட்டுரை வந்ததே!...தமிழிலே வந்த அந்தக் கட்டுரையிலே "இராம கதையால் இமயம் முதல் குமரிவரையில் தோன்றிய விழாக்களில் ஒன்று இது!" என்ற தலைப்பிட்டுள்ளார், "மஞ்சரி" ஆசிரியர்! அவரும் தமிழரே! இமயம் முதல் குமரிவரை கொண்டாடப்படும் இணையற்ற விழாவாம் இராம நவமி!..."இமயம் முதல் இலங்கைவரை" என்று எழுதாமல் போனாரே!...

இலங்கைத் தமிழர்களே!... இராமலீலா விழாவிலே என்னுடைய உருவத்தின் தொங்கும் நாக்கருகில் தீக்கொழுந்து எட்டும்போது ஒரே ஆரவாரம் செய்து களிப்படையும் அந்த இராம பக்தர்களைக் கண்டு நான் பரிதாபப்படுவதுண்டு! தோல்வி அடைந்தவர்களைக் கைகுலுக்கிப் பாராட்டும் இந்த நாகரிக காலத்திலே, துரோகச் செயலால் தோற்கடிக்கப்பட்டு என்றோ வீர மரணம் அடைந்த என் உருவத்தைக் கொளுத்துவதிலா இவர்கள் வீரத்தைக் காட்டவேண்டும்? என் உருவத்தைக் கொளுத்துவதற்கு முன்பு என் உருவத்தின் வயிற்றிலே தின்பண்டங்களை வைப்பது உண்டு. கொளுத்திய பிறகு, அவர்கள் என் வயிற்றிலே வைத்த தின்பண்டங்களை எடுத்து உண்பார்கள்! என் குடலைப் பிடித்திழுத்து உண்ணும் கழுகைப் போலவோ, அல்லது கற்கால காட்டுமிராண்டி மனிதர்களைப்போலவோதான் அவர்கள் அப்பொழுது காட்சியளிப்பார்கள்!

ஆனால் அருமைத் தமிழன்பர்களே! நான் அப்படி அவர்களுக்குச் செய்த குற்றம்தான் என்ன? தமிழ்ப் பெண்ணின் நாக்கையும் மூக்கையும் அறுத்து மானபங்கப்படுத்திய இராமனுக்கு நல்ல பாடம் கற்பிக்க முயன்றதுதான் என்னுடைய மாபெரும் குற்றம்! இராமனுக்கு நல்லதோர் பாடம் கற்பித்து, அவனுக்கும் தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தியிருப்பேன்! ஆனால் நய வஞ்சகத் துரோகிகளால் நான் காட்டிக் கொடுக்கப்பட்டு அழிந்தேன்! நான் அழிந்த இந்த நாளைத்தான் இராமலீலாவாக வட இந்தியர் கொண்டாட, அதற்கு

[தொடர்ச்சி பக்கம்—10]

கர்நாடக

தி. மு. கழக

2-வது மாநாடு

1958 ஏப்ரல் 26, 27-ம் நாட்களில்

பெங்களூர் சிட்டி, சுபாஷ் நகர்,

கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்

கலைவாணர் என். எஸ். கே. அரங்கில்

நடைபெறும்.

★

தலைவர்: டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி

★

அறிஞர் அண்ணா

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

★

இசைமுரசு நாகூர் அனிபா

குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு.

—வரவேற்புக் குழு

வெள்ளி 11-4-58 சென்னை

விற்பனை வரித் தொல்லை!

'தெரியாத தேவதையைவிட தெரிந்த பேயே மேல்'—என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். சென்னை அரசினரின் விற்பனை வரி மசோதா வியாபாரிகளிடையே அப்படி ஒரு மனோநிலையைத்தான் ஏற்படுத்தி யிருக்கிறது.

சென்னை அரசு உத்தேசித்திருக்கும் புதிய விற்பனை வரி மசோதா டாக்டர் லோகநாதனின் அறிக்கையை ஒட்டித்தான் அமைக்கப்பட்டது—என்று அரசினர் கூறுகின்றனர்.

ஆனால் டாக்டர் லோகநாதனின் அறிக்கையே பூரண திருப்தி அளிக்கவில்லை என்று முன்பு வியாபாரிகள் அபிப்பிராயம் கூறி வந்தனர்.

பிறகு சென்னை அரசினரின் புதிய விற்பனைவரி மசோதாவைக் கண்டபோது டாக்டர் லோகநாதனின் அறிக்கையே பரவாயில்லை; அவரது சிபார்சுகளை அமுலாக்கினாலே போதும்—என்று கூக்குரல் போடுகிற அளவுக்கு இன்று வர்த்தக சமுதாயம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்திய உபகண்டத்திலேயே அதிகமான வரிப் பளுவைத் தாங்கிக் கொண்டிருப்பவன் தமிழ்நாட்டான்தான்! மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் அவன்மீது ஏற்றி வைத்திருக்கும் வரிச்சுமை இதர மாநிலத்தவர் சுமப்பதைவிட எல்லா விதத்திலும் அதிகமாகத்தான் இருக்கிறது.

அந்தப் பின்னணியில் டாக்டர் லோகநாதனின் விசாரணைக் குழுவினர் விற்பனை வரிபற்றி குறிப்பிட்டிருந்த சிபார்சுகள் பல வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் பேருதவி செய்வதாக இருந்தன.

அவர் ஒருமுனை விற்பனை வரியைச் சிபார்சு செய்து; ஒருமுனை விற்பனை வரி அமுல் செய்யப்படுகையில் காலப் போக்கில் அரசினருக்குப் போதிய வருமானம் கிடைத்து விடுமென்றும்; அதனால் வரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கும் தொகையை ரூ. **10,000**—என்பதிலிருந்து ரூ. **25,000** ஆக உயர்த்தலாம் என்று கூறியிருந்தார்.

—இது ஏராளமான சில்லரை வியாபாரிகளுக்கு வரிக் கொடுமையிலிருந்து விடுதலை வழங்குவதாக அமைந்திருந்தது.

அதோடு லோகநாதன் விசாரணைக் குழு உணவுப் பொருள்; பால் முதலியவற்றிற்கு வரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கலாம்—என்று சிபார்சு செய்திருந்தது.

—ஆனால் சென்னை அரசினரின் புதிய விற்பனை வரி மசோதாவோ இவற்றை யெல்லாம் எள்ளளவேனும் கவனித்ததாகத் தெரியவில்லை.

லோகநாதன் விசாரணைக் குழுவின் அறிக்கையில் தங்களுக்குப் பிடித்தமான சிலவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு; முக்கியமானவற்றைத் திருத்தியும்; பெரும்பாலானவற்றை நிராகரித்தும் இந்த மசோதாவைத் தீட்டியிருக்கின்றனர்.

—இவர்களது இந்த மாற்றங்களையும், திருத்தங்களையும், கவனிக்கும்போது லோகநாதன் அறிக்கையைப் பற்றி அதிருப்தி கொண்டிருந்த வர்த்தகர்கள் அனைவரும் அதுவே மேல் என்று கருதுகின்ற நிலைக்கு வந்துவிட்டனர்.

முக்கியமாக விற்பனை வரி மேல் வரம்பு சில்லரை வியாபாரிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் அனைவரையும் வரி என்னும் மாய வலையில் சிக்க வைப்பதாய் இருக்கிறது.

வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கும் தொகையை **10,000** என்பதிலிருந்து **25,000** ஆக உயர்த்தலாம்—என்கிற டாக்டர் லோகநாதன் சிபார்சுக்கு நேர்மாறாக ஆண்டொன்றுக்கு ரூ. **5,000** ரூபாய்க்குமேல் வியாபாரம் செய்பவர்களிடமிருந்தும் விற்பனை வரி வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது புதிய விற்பனை வரி மசோதா.

இது சில்லரை வியாபாரிகளை எவ்வளவு கொடுமைப் படுத்தும் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை.

பெரும் பண முதலைகள் யாரும் சில்லரை வியாபாரம் செய்வதில்லை. பொதுவாக போதிய எழுத்தறிவில்லாதவர்கள் தான் சில்லரை வியாபாரிகளுள் பெரும்பான்மையினராக இருப்பார்கள்.

இத்தகைய சமுதாயத்தினர்மீது விற்பனை வரி அதிகாரிகளை ஏவி விடுவது; சிறு குழந்தைகள்மீது சின வேங்கைகளை ஏவி விடுவது போலத்தான் இருக்கும்!

அதோடு உணவுப் பொருள்கள்மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியையும் இந்த மசோதா நீக்க முயற்சிக்கவில்லை.

ஆனால் சட்டசபையில் விவாதத்திற்குப் பதிலிறுத்த அமைச்சர், ஒருமுனை விற்பனை வரி கேட்டு வற்புறுத்திய வியாபாரிகள் பலமுனை வரியை விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இதற்கும் காரணமில்லாமலில்லை.

விதிப்பது ஒருமுனை வரியாக இருந்தாலும்; பலமுனை வரியாக இருந்தாலும்; வரி விகிதம் கூடுமானவரையில் குறைவாக இருக்க வேண்டுமென்பது டாக்டர் லோகநாதன் அறிக்கை தெரிவித்திருந்த விருப்பம். அவ்வாறு வரி விகிதம் குறைவாக இருந்தால்தான் வியாபாரிகளிடையே வரி கொடுக்காமல் தப்ப வேண்டுமென்ற உணர்ச்சியை ஓரளவு தடுத்து நிறுத்த முடியும் என்பது அதன் கருத்து.

ஆனால் வியாபாரிகளின் விருப்பப்படி ஒருமுனை வரி விதிப்பதாகக் கூறுகிறவர்களோ; அதையே சாக்காகக் கொண்டு ஒருமுனை விற்பனை வரி என்ற பெயரில் வரி விகிதத்தை கண்ணை மூடிக் கொண்டு உயர்த்த முயற்சிக்கிறார்கள். அதனால்தான் வியாபாரிகளிடையே ஒருமுனை விற்பனை வரி என்றதும் ஒருவித பயமே ஏற்பட்டுவிட்டது.

—இவ்வளவு தொல்லைகளுக்கும் இடமளிக்கும் இந்தப் புதிய மசோதா வர்த்தக சமுதாயத்தினரால் மிகவும் கவலையுடன் கவனிக்கப்படுகிறது.

அதனால் ஒரு நாள் கடையடைத்து அவர்கள் அரசினருக்குத் தங்கள் ஒருமித்த எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இருந்தாலும் மசோதாவைச் 'செலக்ட் கமிட்டி'க்கு விட்டிருப்பதும்; தேவையான மாற்றங்களை இப்போது செய்வதற்கு இடம் இல்லாமலில்லை என்கிற நிலை பிறந்திருப்பதும் ஒரு விதத்தில் ஆறுதல் அளிப்பதாகத்தான் இருக்கிறது.

செலக்ட் கமிட்டி தேவையான மாறுதல்களைச் செய்து வர்த்தக வகுப்பினரையும் பொதுமக்களையும் திருப்தி செய்யவேண்டுமென்பதுதான் நமது விருப்பம். ஃ

தணிக்கைக் குழுவின் கத்தரிக்கோல்!

"தமிழ் நாட்டில், படத் தொழிலுக்கு இந்தத் தணிக்கைக் குழுவால் ஏற்பட்டுள்ள கொடிய கஷ்டம் ஊரறிந்த ஒன்றாகும்.

"ஒரு பத்தாண்டுகளுக்குமுன் தமிழ்ப் பட உலகில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்தது. அதுவரை வழக்கமாக படமாக்கப்பட்டுவந்த புராணம், மற்றும் இதிகாசக் கதைகளுக்கு மாறாக, நவீன காலப் பிரச்சினைகளைப் பற்றிய கதைகள் படமாக்கப்படும் நிலை முகிழ்த்தது. இராமன், கிருஷ்ணன், அர்ச்சுனன் முதலிய புராண நாயகர்களுக்குப் பதிலாக, தோட்டத் தொழிலாளர்களும், ஆலைத் தொழிலாளர்களும், குமாஸ்தாக்களும் கதாநாயகர்களாயினர். இப்படிப்பட்ட படங்களுக்கு மகத்தான வரவேற்பு கிடைக்கத் துவங்கிற்று.

"இந்த மாற்றத்தை அறிஞர் அண்ணா அவர்கள், தமது 'வேலைக்காரி' 'நல்ல தம்பி' போன்ற கதைகள் மூலம் தோற்றுவித்தார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரானதால், அவரது கதைகளுக்குக் கிடைக்கிற அமோகமான ஆதரவு அவரது கட்சிக்கும், ஆதரவையும் வலிவையும் தேடித் தரக்கூடும் என்று சிலர் அஞ்சினர். இப்படிப்பட்டவர்களின் அச்சத்தைத் தவிர்ப்பதற்காகவோ என்னவோ தணிக்கைக் குழுவினர், தங்களது கத்தரிக்கோலைப் பதப்படுத்திக்கொண்டனர்.

"சாதிக் கேடுகள், மூடப் பழக்க வழக்கங்கள் போன்ற இதர சமூகக் கேடுகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கும் முற்போக்கான சமூகக் கதைகள், தங்களது கூராக்கப்பட்ட கத்தரிக்கோலுக்குப் பெருமளவுக்கு வெட்டப்படாமல—தப்பமுடியாது செய்துவிட்டது, தணிக்கைக் குழு! இந்தப் போக்கு, படத் தொழிலில் முதலீடு செய்கிறவர்களுக்கு பெரும் பீதியூட்டிவிட்டது.

—பாராளு மன்றத்தில் ஈ. வி. கே. சம்பத்.

மருத்துவரின் மன மயக்கம்!

சுந்தரச் சோலை அது!

காற்றும் புயலும் அழிக்க முடியாத கரைகட்டி—கண்ணீரும் செந்நீரும் கலந்து ஊற்றி—இலட்சிய விதை நட்டு — கொள்கைக் கொடி காத்து—நாட்டுக்கும், நல்லவர் கண்களுக்கும் வண்ணப் பூக்கள் பல வளர்த்துக் காட்டியது அந்தத் தோட்டம்!

அன்று, உயர் எண்ணங்கள் மலர்ந்த சோலை அது!

இன்று, பாலையாக மாறி விட்டது!

நேற்றுவரையில் பற்றுதல் கொண்டிருந்தோர், இன்று பதை பதைக்கின்றனர்! பார்த்து ரசித்தவர்கள் பரிகாசத் தொனியிலே 'பாசுரம்' பாடுகின்றனர்!

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இந்திய உபகண்டத்து மக்களின் உள்ளம் தழுவி—வெள்ளையனை வெளியே துரத்த சுதந்திரப் பரணி பாடிய நேரத்திலே சொந்த வாழ்க்கையைக் கருக்கிக் கொண்டோர்; பந்தம் பாசத்தை உதறித் தள்ளியோர்; உயிருக்கும் மேலான நாட்டு விடுதலைக்குத் தங்களது உயிரையும் துணிந்து தந்தோர் மிகப் பலர் என்ற விருதுகளோடு—இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தோம் என்ற பட்டயம் பொறித்துக் கொண்ட காங்கிரஸ் — இன்று காலவெள்ளத்தின் வேக ஓட்டத்தில் கரைகின்ற காட்சியைத்தான் நாம் காண முடிகிறது!

புரையோடி விட்ட புண்ணை மறைக்க புனுகு பூசப்பட்டிருந்தது, இத்தனை காலம்!...

மெருகுப் பேச்சால் கட்சியின் கருகிப் போன பாகங்களை மறைத்து வந்தனர், பத்தாண்டு காலமாக!...

இன்று...

புண் முடை நாற்றம் வீசுகிறது. வாடை சகிக்காமல்—மனச் சாட்சி தருகின்ற சவுக்கடிக்குப் பதில் தர முடியாமல்—நல்ல நெஞ்சு படைத்தவர்கள் வேகவேகமாக வெளியேறுகின்றனர், காங்கிரஸ் கூடாரத்தை விட்டு!

ஜால வார்த்தைகள் கூட இன்று கவைக்குதவாததாகி விட்டன!

கட்டறுத்து கண்மூடித்தனமாக ஓடுகின்றது காங்கிரஸ் காளைமாடு!

மேலிடத்து ஆணைக்கு மதிப்பு தந்து ஆட்சிச் சக்கரத்தை செவ்வனே சுழற்ற வேண்டிய சூழ்நிலை இன்று அடியோடு மாறி விட்டது! ஆகவேதான் தலைமைப் பீடத்தில் இருக்கின்றவர்கள் அக்தத் தகாத வழிப் பயணம் கண்டு தவிக்கிறார்கள் — தடுமாறுகிறார்கள்! ஆணையிட வேண்டியவர்கள் அலறுகிறார்கள்:

"பொதுமக்களின் கண்களில் காங்கிரஸ் ஒரு நகைப்புக்குரிய அமைப்பாக மாறி விட்டது......சுயநலப் போக்கால் உந்தப்பட்டவர்கள் புரிகின்ற தீய திருவிளையாடல்களால் காங்கிரஸ் வலுவிழந்து விட்டது. சுயநலமிகளின் கூடாரமாகவே மாறிவிட்டது..."

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்ற ஒரு கட்சியின்மீது எதிர்க் கட்சியினர் சுமத்தக் கூடிய குற்றச்சாட்டு இது! வெற்றி அப்பக்கம் இருக்கிறதே என்று வேதனைப்படுவோர்—வேண்டாதோர் குவிக்க வேண்டிய பழிச்சொற்கள் இவை!

ஆனால், இன்று காங்கிரசிற்குக் கிடைத்திருக்கின்ற இந்த 'நற்சாட்சிப் பத்திரங்கள்' அப்படி எதிர்த்த திசையிலிருந்து கிடைத்தவையல்ல!

கோட்டைக்குள்ளேயிருந்தே குமுறி எழுகின்றது இந்தக் குரல்—அதுவும் அனைத்திந்திய காங்கிரசின் தலைவர் தேபர்தான் இப்படித் தேம்பி அழுகிறார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் இமயத்தின் உச்சியிலே ஏற்றப்பட்டதுபோல உலக அரங்கிலே சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த காங்கிரஸ் தீபம், இன்று தரை மட்டத்திற்கு—ஏன், படுபாதாளத்தை நோக்கி கவிழ்ந்து விழுந்து கொண்டிருக்கிறது!

ஆகவேதான் தேபர் அழுகிறார்; அதோடு மட்டுமல்ல; சபிக்கவும் செய்கிறார்—

"காங்கிரஸ் கட்சி உயிர் வாழ்வதைவிட செத்துத் தொலைந்திருந்தால் மேலாக இருக்கும்"

--என்று!

புரையோடி விட்ட புண் சீழ் கட்டி அரித்து விட்டது உடலை; இனி உயிர் பிழைப்பது கடினம்—ஆகவே செத்து மடிந்து விடுவதே மேலல்லவா!

கேரளம் ஒன்றைத் தவிர, அகில இந்தியாவிலும் ஜெயக் கொடி நாட்டி விட்டது காங்கிரஸ்; பலன் பார்த்து பணியாற்றுகின்ற தொண்டர்களுக்கு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கி விட்டனர்—என்று தேர்தல் முடிந்து, காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏறி, அலங்காரமாக அமர்ந்த நேரத்திலே சொல்லிச் சொல்லிப் பூரித்தார்கள்.

ஆனால், அன்று அவர்கள் பெற்ற வெற்றி கொள்கையைக் காட்டியோ; இலட்சியத்தின் சிறப்பை விளக்கியோ; சாதனைகளின் பட்டியலை நீட்டியோ அல்ல; நல்ல பண்புள்ளோர் நெஞ்சங்களையும் துளைத்துச் சாய்த்து விட்டு, பாதாளம் வரையில் பாய்கின்ற பணத்தின் வலுவால்தான் என்பது இன்று புலனாகி விட்டது! வடக்கு—தெற்கு என்று பாகுபாடின்றி, ஒவ்வொரு மாநிலத்திலும் இன்று தலைவிரித்தாடுகின்ற மூடி மறைக்க முடியாத உட்போராட்டம் அதை அப்பட்டமாகக் காட்டிவிட்டது.

சுயநலம்—

பதவி வெறி—

லஞ்சம்—

ஊழல்—

பொறாமை—

பக்கத்திலிருந்து குழி பறிக்கும் பண்பு—

[தொடர்ச்சி பக்கம்—9]

ஊருக்கொரு மருத்துவர் யாருக்கென்று ஓடுவார்? —'சங்கர்ஸ் வீக்லி'

சிப்பியில் விளையாத முத்து

முல்லை சக்தி

பகல் பொழுது மரண தேவனின் அகண்ட வாயில் மெதுவாக விழுந்து கொண்டிருந்தது. கதிரவன் அணு அணுவாக செத்துக் கொண்டிருந்தான். இரண்டொரு விநாடி...அதன் பின் எங்கும் காரிருள்...இரவு அரக்கி தனது கருப்பு முந்தானையால் வையகத்தை மூடி மறைத்துவிடுவாள்... அதற்குப் பின் இருள் தேவதையின் கோர நர்த்தனம்தான்!...

'பாவு' பரமசிவம் ஆவி சோர—'புவியில் ஏன் பிறந்தோம்' என்ற ஏக்கத்துடன் — துக்கம் தொண்டையை அடைக்க—விக்கம் கொண்ட இதயத்துடன் புறாக் கூண்டுபோன்ற குடிசையில் நுழைந்தான். வையகத்தை மிரட்டிக் கொண்டிருந்த இருள்போல் அவன் உள்ளமும் இருளடைந்திருந்தது.

அவன் மனைவி பார்வதி புழுதியிலே புரண்டு கொண்டிருந்தாள். பசியின் கொடுமை அவளது முகத்தில் 'பளிச், பளிச்' சென மின்னிக் கொண்டிருந்தது. 'தங்க மோகனத் தாமரையோ; பொங்கும் பூரண நிலவோ உன் முகம்'—என்றெல்லாம் அவளது எழிலும் பொழிலும் நிரம்பிய வதனத்தை வர்ணித்திருக்கிறான் பரமசிவம். அதெல்லாம் அந்தக் காலம்...... சிரிப்பும், செழிப்பும் அவன் வீட்டிலே தவழ்ந்து ஓடிய போது...! இன்று...? அவள் முகம் காய்ந்த மலர்...தேய்ந்த நிலவு!.......'பட்டை தீட்டிய வைரமடி உன் கண்கள்...தீட்டிய கூர்வாளடி உன் விழிகள்' என்றெல்லாம் அழைக்கப்பட்ட அவளது கண்கள் சோர்ந்து, வெம்பிய மாவடு போல் காட்சி அளித்தது! வைரத்தின் பளபளப்பையும், கூரிய வாளின் ஒளியையும் உமிழ்ந்து கொண்டிருந்த கண்களுக்கு கண்ணீரைச் சிந்தக்கூட சக்தி இல்லை! கண்ணாடிக் கன்னங்கள் 'ரசம்' இழந்து காட்சி அளித்தன! கோவை இதழ்கள் வெளுத்திருந்தன! உடல் வாடி சருகாகி விட்டது! இந்நிலையில் — புழுதியிலே புழுப்போல் துடித்துக் கொண்டிருந்த பிடியிடையாளைக் கண்ட பரமசிவத்தின் நாடி நரம்பெல்லாம் நடுங்கிற்று. கண்கள் கண்ணீரைச் சிந்தத் தயாராக இருந்தன...

''பார்வதி...'' — அவன்மேல் அவள் தன் பார்வையைப் பதித்தாள். அவளால் பேச முடியவில்லை. அல்ல; பேச விரும்பிய போதிலும் பேசுவதற்கு பலம் இல்லை. சோர்ந்த கண்களால் பேசினாள், அந்த பரிதாபத்துக்குரியவள்!...

''பார்வதி! ராணியை எடு! இன்று அவளை விற்றே ஆக வேண்டும்!'' — பெற்ற வயிறு பற்றி எரிந்தது. ஆயிரம் ஆயிரம் கூரிய வேல்கள் அவளது இதயத்தில் தைத்தன. தள்ளாடித் தள்ளாடிச் சென்று, கயிற்றுக் கட்டிலிலே பசியால் மயங்கிக் கிடந்த தனது வெள்ளி நிலவை—ஒரு சொட்டு பால்கூட கிடைக்காத காரணத்தால் மரண தேவனின் கதவுகளைத் தனது பிஞ்சு விரல்களால் தட்டிக் கொண்டிருந்த மழலை மொழிச் செல்வத்தை—தனது காய்ந்து திய்ந்துபோன கரங்களால் அணைத்துக் கொண்டாள் பார்வதி. பால் சுரக்க சக்தியற்றிருந்த மார்பகத்தில் தழுவி, உச்சி முதல் உள்ளங்கால்வரை தனது உலர்ந்த அதரங்களால் முத்தமிட்டாள்.

அவளது கண்கள் கண்ணீரை முத்து முத்தாகச் சிந்தின...... அய்யோ! கொட்டிய கண்ணீர்த் துளிகளெல்லாம் அந்த ஒட்டிய வயிறுக்கு பால் துளிகளாக மாறியிருக்கக்கூடாதா? செத்துக் கொண்டிருந்த அந்த சிசுவின் உதடுகளிலே ஒரு துளி கண்ணீர் விழுந்தது! அந்த உப்பு நீரை அந்த 'சடலம்' சுவைத்த காட்சி..... இரும்பு இதயத்தையும் இளகவைக்கும்! ஆனால், இந்த வையகத்தில் வாழும் பலரது இதயங்களெல்லாம் இரும்பால்தானே செய்யப்பட்டிருக்கிறது!

''பார்வதி! நான் சொல்வதைக் கேள். ஒரு துளி பாலுக்கும் வழியின்றி இக்கிளி மாளப் போகிறது! அதற்குள் அதை யாருக்காவது விற்றுவிடுவோம்! அங்கேயாவது அது வளரட்டும்...நமது பசியும் தீரும்!''

''அத்தான்! சின்னப் புது மலர்—சிங்கார அகல் விளக்கு—என்றெல்லாம் அழைத்து, அணைத்து, கன்னம் சிவக்கச் சிவக்க முத்த மழை பொழிவீர்களே; அதையெல்லாம் மறந்தீரோ? வெள்ளி நிலவு—புள்ளி மயில் — என்றெல்லாம் மகுடமிட்டு புளகாங்கிதமடைவீர்களே; அந்த நினைவெல்லாம் அழிந்துவிட்டதா உங்களுக்கு? மோவா அரும்பு — தாவாச் சிறுமீன் என்றெல்லாம் கூறி உச்சி முகர்ந்து முத்தமிட்ட நீங்களா; ஈறு காட்டி, இளநகை புரியும் என் இன்பப் புதையலை இழக்கத் துணிந்துவிட்டீர்கள்? 'வானத்தில் மின்னும் மின்னலடி நம் அரும்பின் புன்னகை — வான் முகட்டிலே தேனருவியிலே இல்லையடி இன்பம்—நம் செல்வத்தின் புன்னகையில்தான் இருக்கிறது' என்று கூறுவீர்களே அத்தான்; அந்த எண்ணங்கள் செத்தா போய்விட்டன? எப்படி அத்தான் துணிந்தீர்கள், நமது குல விளக்கை—நம் வாழ்வின் நிலவை இழக்க எப்படி அத்தான் துணிந்தீர்கள்?...''

''பார்வதி! புத்திர பாசம் என்னைவிட்டுப் போகவில்லையடி! பாசமும் நேசமும், ஆசையும் அன்பும் 'பால்' அல்லவே அந்தப் பால் வடியும் முகத்தின் பசியைப் போக்க! பசியால் சுருண்டு, மயங்கி, மடிந்துவிடப் போகிறேன் என்று பயமுறுத்தும் நம் பாவையைப் பார்! நம் கண் முன்னால் நம் குலக் கொழுந்து அழிந்து கொண்டிருக்கிறது.....அதற்குள்.....அதற்குள்...''—அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.....விக்கினான்...விழிகளில் கங்கையும் காவேரியும் புரண்டன!

''ஐயோ! ஆண்டவனே! யார் யாருக்கோ என்னென்ன உதவி எல்லாமோ செய்தீராமே; கண் திறந்து கருணை பொழியக் கூடாதா? ஞானசம்பந்தருக்குப் பாலூட்டி பரிபாலித்த உமையாளே! உன் இமைகள் திறவாததேனோ?''—பார்வதி பேசினாள்... இல்லை; இல்லை; இதயம் புலம்பிற்று!

அந்த பரிதாபத்துக்குரிய பார்வதியின் குரல்—புலம்பல்—பரமண்டலத்தைப் பரிபாலிக்கும் பரமசிவ-பார்வதியின் நர்த்தன ஒலியில், அவர்கள் செவிகளில் எங்கே விழப்போகிறது? இதைப் பார்வதி புரிந்து கொண்டாளோ என்னவோ—திடீரென்று ஆண்டவனைப் பிரார்த்திப்பதை நிறுத்திக் கொண்டாள்! கடவுளுக்கு விண்ணப்பம் விடுவது வீண் என்று அவளது பகுத்தறிவு அறிவுறுத்தியது போலும்!

●

பரமசிவம் ஒரு கைத்தறி நெசவாளி! தமிழகத்தின் தலைச் சிறந்த கலையின் காவலன். 'பாவு' போடுவதில் வல்லவன். ஆகவேதான் 'பாவு' என்று அடை மொழி அவன் பெயருக்கு முன்னாலே ஒட்டிக் கொண்டிருந்தது. அவன் பாவு போட்டுப் பின்னிய பல வானவில்லின் வர்ண ஜாலங்கள் நிரம்பிய ஆடைகள் ஆரணங்குகளின் அங்கங்களை மறைத்திருக்கின்றன. அழகிகளின் அழகை அதிகமாக்கியிருக்கிறது. பரமசிவம் 'பாவு' போடுவான். பார்வதி சின்னச் சின்ன இதழ்பின்னி சித்திரக் கைத்தறி சேலைகளாக்குவான்.

உழைப்புக் கேற்ற ஊதியம் பெற்று—தேவைக்கேற்ற வசதியோடும் வாழ்ந்த அவர்களது குடும்பத்தில் திடீரென்று புயல் வீச ஆரம்பித்தது. குறைந்த விலையில் 'ஆலை சரக்குகள்' குவிய ஆரம்பித்தன. தென்னகத்தின் இன்பச் சொத்து கைத்தறி—அதைக் காப்பது நமது கடமை என்று நினைப்பவர்கள் குறைந்து விட்ட காரணத்தால், அவர்களது தொழிலுக்கு மூடு விழா நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

பரம்பரை பரம்பரையாக கற்ற தொழில்...அதை விட்டு வேறு தொழில் செய்ய முடியாத நிலை! மயில்கண் வேட்டி, பட்டுப் புடவை ஆகியவைகளை நெய்த அவர்களின் கரங்கள் வேறு வேலைகளைச் செய்யத் துணிந்த போதிலும், அதைப் பரிட்சித்துப் பார்க்க மற்றவர்கள் துணியவில்லை. ''கைத்தறி துணி வாங்கலியோ? புத்தாடை அணியீரோ?'' என்று கூவிய அவர்களது வாய், ''வேலை தாரீரோ? கவலையைத் தீர்ப்பீரோ?'' என்று கதற ஆரம்பித்தது.

ஆனால் நாகரிகத்தின் பிடியில் மெய் மறந்து கிடக்கும் உலகத்தின் செவிகளில் அந்த ஒலி விழவே இல்லை; கைத்தறி நெசவாளர்கள் சிந்திய கண்ணீரைக் கூட காண நேரமில்லாமல் உலகம் மிக மிக வேகமாக 'சந்திர மண்டல'த்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

'மக்கள் அழப் பிறந்தவர்களல்ல; வாழப் பிறந்தவர்கள்' என்ற தத்துவத்தை மேடைதோறும் மடை திறந்தாற்போல் பேசும் அரசியல் வாதிகளுக்குக்கூட நேரமில்லை, இந்த நெசவாளர்களின் வாழ்வு நைந்து போனதைக் காண!

[தொடர்ச்சி பக்கம்—8]

சென்ற இதழில்...

கரகமாடி கண்ணனது பேயோட்டும் திருப்பணியால் உடல் வீங்க அடிக்கப்பட்ட தீச்சட்டி சிங்கா ரத்தின் காயங்களுக்கு மஞ்சள் பத்து அரைக்க அடுக்களைக்குச் செல்கின்றார்கள், கற்பூரமும் பொன்மணியும்!...

பேச்சுக்கிடையில், பொன்மணி சிங்காரத்தைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற பாணியில் பேசுகிறாள் கற்பூரம். பிடிக்காத பொன்மணி எழுந்து சென்று விடுகிறாள்......

கற்பூரம் ஆடு மாடுகளுக்குத் தீனி வைப்பதற்காக தன் வீட்டுக்குப் புறப்படுகிறாள். அவளைப் பின் தொடர்ந்து வந்த கண்ணனை நாணத்துடன் வீட்டிற்குள் அழைக்கிறாள். கண்ணனிடம், தான் அவனிடம் கொண்டு விட்ட காதலைத் தெரிவிக்கிறாள்......

ஆனால் கண்ணனோ, பொன்மணியைத் தனக்கு சம்மதிக்க வைக்க வேண்டும்—என்று கற்பூரத்தை வேண்டுகிறான்......

கற்பூரம் அலறுகிறாள். அவள் தடீரென உணர்ச்சி வசப்பட்டால் என்ன ஆகும்?......

11

வழக்கமாக வரும் ஆவேசம் வந்து விடவே கற்பூரம் என்றைக்குமில்லாத படபடப்போடு சாமியாடத் தொடங்கினாள் "அடப்பாவி! பழிகாரா! உன்னை என்ன பாடுபடுத்துகிறேன் பார்! நம்பியவளுக்குத் துரோகம் செய்த உன்னை சபிக்கிறேன். நீ நாசமாய்ப் போக! அடேய்! இந்த ஜீவனோட மனசை அறியாமல் பாப வார்த்தை பேசி விட்டாய்! ஆய்! ஊய்!" என்று அவள் கத்திக்கொண்டே தலைவிரி கோலமாய்த் தாண்டவமாடுவதைக் கண்டு கண்ணன் சற்று மிரண்டுவிட்டான்.

உடனே அவன் சமாளித்துக்கொண்டு, "தாயே! மன்னித்து விடு...தேவி! மன்னித்துவிடு! அபச்சாரம்.........அபச்சாரம்" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டான்.

ஒருவழியாக கற்பூரத்தின் மீது வந்த சாமி, மலையேறியது. கண்ணன் அவளை ஆசுவாசப்படுத்தி 'பெரிய பைத்தியமாயிருக்கியே — சும்மா உன்னை வேடிக்கை பாக்கிறத்துக்காக விளையாட்டு காட்டினா—நீ ஒரே அடியா உண்மைன்னு நம்பிகிட்டு குதிக்கிறியே! எந்தக் காதலனாவது தன் காதலிகிட்ட வந்து இன்னொரு பெண்ணுக்குத் தூது போகச் சொல்லுவானா? உன் மனசை அறியிறத்துக்காக ஒரு போடு போட்டேன். அதுக்குள்ள அந்த அவசரக்கார சாமி ஓடியாந்துட்டுதே!" என்று கேலி செய்தான்.

கற்பூரத்திற்கு சந்தேகம் தீரவில்லை விழிகளை வினாக்குறிகளாக்கி அவன்மீது வீசியெறிந்தாள். "கண்ணல்ல—கோபிக்காதே கற்பூரம்! என்னை சத்தியமாக நம்பு! வேண்டுமென்றேதான் விளையாடினேன். நீ பயந்துட்டே! பயப்படாதே தங்கம்!"—கண்ணன் சமாதான வார்த்தைகளைக் குவித்துக் கற்பூரத்தை மறுபடியும் தன் தோள்மீது சாய்த்துக் கொண்டான். அவளும் அவனை நம்பி விட்டாள்.

"நமது தொடர்பை உங்க அண்ணன் சிங்காரம் ஏற்றுக் கொள்வானா? ஊஹூம்; ஏற்றுக் கொள்ளவே மாட்டான். அவன் மகா முரட்டு மனுசன். அவனைமீறி நாம் எப்படித்தான் ஒண்ணாகப் போகிறோமோ; தெரியவில்லை!" யென்று கண்ணன் அங்கலாய்த்துக் கொண்டதைப் பார்த்து கற்பூரம், "கவலைப்படாதிங்க—எங்க அண்ணன் மனசைத் திருப்புறது என் வேலை" என்று உறுதி கொடுத்தாள்.

மனக்கதவை விரியத் திறந்து வைத்துக் கொண்டு பொன்மணியின் பிரவேசத்திற்காகக் காத்திருக்கும் கண்ணனுக்கு கற்பூரத்தின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஆசை நிறைந்த வார்த்தைகள் எதுவும் சுவைக்கவில்லை.

கிட்டாத ஒன்றிற்காக எட்டி எட்டிப் பார்ப்பதும், கடினமின்றிக் கிடைத்ததை அலட்சியமாகக் கருதுவதும் சிலரது பண்பல்லவா? கிட்டாத பழத்தைப் புளிக்கும் என்று சொல்லுகிற தந்திரம்கூட கடைசி முயற்சியின் தோல்விக்குப் பிறகுதானே தோன்றுகிறது! அதனால் கண்ணன் இன்னும் தான் சளைத்துவிடவில்லையென்று உறுதி பூண்டிருந்தான். எப்படியும் பொன்மணியைத் தன் ஆசைக்குப் பணிய வைத்து, அவள் கழுத்தில் ஒரு கயிற்றையும் கட்டிவிட வேண்டுமென்று அவன் கட்டிய கோட்டை நிச்சயம் இடிந்து விழாது எனும் தைரியம் கொண்டிருந்தான்.

கற்பூரம் அவனது இலட்சிய முகடு அல்ல! பாலைவனத்துப் பயணத்தில் கிடைத்த பேரீச்சை மர நிழல்! அவ்வளவுதான்! அந்த அளவே அவன் அவளிடம் ஆசை காட்டினான்.

சிங்காரத்தையும் கண்ணனையும் அருகருகே நிற்க வைத்துப் பார்க்கிறவர்கள், சிங்காரத்தை மிகக் கொடியவனாகவும், கண்ணனை உத்தமனாகவும் வர்ணிப்பர். சிங்காரத்தின் தோற்றமும், பயங்கரக் குமிழ் விழிகளும் அவனை ஒரு முரடனாகவே சித்தரித்துக் காட்டும். அழகில் ஆபத்து ஒளிந்திருக்கும் என்பதற்குக் கரகமாடி கண்ணன் எடுத்துக்காட்டு! அதைத்தான் கற்பூரத்திடம் அவன் காட்டிய களங்கம் மண்டிய அன்பு எதிரொலித்துக் கொண்டிருந்தது. மனித சமுதாயத்தில் சாவ சாதாரணமாகக் காணப்படுகிற இரு குணச் சித்திரங்கள் தான் சிங்காரமும் கண்ணனும்!

நாடகங்களில், கதைகளில், படக் காட்சிகளில் வருகின்ற வில்லன்கள் பார்ப்பதற்கே நடுக்கம் தரும் விதத்தில் இருப்பார்கள். கதாநாயகர்களான நல்ல பாத்திரங்களோ அழகானவர்களாகக் காட்சி தருவார்கள். ஆனால் சிற்றூரில் சிங்காரமும் கண்ணனும் அந்தக் கற்பனையாளர்களுக்கு நேர்மாறான வகையில் உலாவிக்கொண்டிருந்தார்கள்.

அந்த இரு குணமுடையோருக்கும் இடையில் தனிக் குணம் கொண்டவளாய் கற்பூரம் திகழ்ந்தாள். அவளிடத்தில் அன்பு கொழிக்கும் நெஞ்சமும் இருந்தது. அதே சமயம் அந்த நெஞ்சு, நஞ்சு கொட்டுவதாகவும் மாறிக்கொண்டது. காதலுக்காகத் தவறு செய்வதை அவள் குற்றமாகக் கருதவில்லை. அத் தவறின் விளைவாகத்தான் தனக்குக் கண்ணன் கிடைத்தான் என்று பூரித்துப் போயிருப்பவளுக்கு அவனது மனதில் சுற்றிக்கொண்டிருக்கும் மலைப்பாம்பின் வடிவம் எப்படித் தெரிய முடியும்!

மறுபடியும் சந்திப்பதாக வாக்களித்துக் கண்ணன் கற்பூரத்தை விட்டுப் பிரிந்து போனான். அவளுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. தான் கண்டதும் அனுபவித்ததும் கனவா—என்ற ஐயம் எழுகிற அளவுக்குக் கற்பூரம் மெய் மறந்து நின்றாள்.

மஞ்சள் பத்தையும் மீறிக் கொண்டு கிளம்பிய வலியைப் பொறுக்கமாட்டாமல் படுக்கையில் முனகியவாறு மெதுவாகப் புரண்டு கொண்டிருந்தான் சிங்காரம். எங்கேயோ போன பிள்ளை இன்னும் வீட்டுக்கு வரக் காணோம் என்று வாய்க்குள்ளேயே கூறிக்கொண்டு பூஞ்சோலையம்மாள் படுத்தவள் தான்; நன்றாகக் குறட்டை விடுத் தூங்கி விட்டாள். பொன்னையாவையும் இருமல் தொந்திரவு படுத்தாததால் அவரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

தஞ்சை மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

★

மே, 10, 11 தேதிகளில்

திருவாரூரில் நடைபெறும்.

★

தலைவர்:

கே. ஏ. மதியழகன் பி. ஏ.

திறப்பாளர்:

ப உ. சண்முகம் எம். எல். ஏ.

விடுதலை முரசொலிக்க வாரீர்! வாரீர்!

—வரவேற்புக் குழு.

பொன்மணி, கூடத்தையொட்டிய அறைக்குள்ளே படுத்து ஏதோ குரு குருவென்று யோசனை செய்து கொண்டிருந்தாள். எவ்வளவோ முயன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. முனகிக்கொண்டிருந்த சிங்காரத்தின் நிலைமை அவளுக்குப் பெருங் குழப்பத்தை உண்டு பண்ணியது. கற்பூரத்தின் சூசகமான பேச்சுக்களைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். சிங்காரம் தன் வீட்டில் வைக்கப்பட்டிருப்பதே கற்பூரத்தின் ஏற்பாடுதானே என்ற சந்தேகம் எழும். உடனே மூட நம்பிக்கை குறுக்கிடும். பேய் பூதத்தை நம்பி கற்பூரத்தின்மீது நினைத்த குற்றச்சாட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்வாள். ஆனாலும் கடைசிவரையில் மூட நம்பிக்கை வென்றிடவில்லை. பேய் பிடித்திருக்கலாம்; நியாயம்—அதற்காக சிங்காரம் தன் வீட்டில் ஏன் இருக்க வேண்டும்? இருந்துவிட்டுப் போகட்டும்; ஒருவருக்கு உதவி செய்வதால் பாபம் வந்து விடாது! ஆனால் இரண்டு வித ஆபத்துகள் அல்லவா படையெடுத்து முற்றுகையிட்டிருக்கின்றன!

கற்பூரம், இந்த சாக்கில் தன் அண்ணனுக்குப் பெண் பார்க்கிருள். அவள் போகும் போக்கைப் பார்த்தால் ஊரிலே கதை கட்டி விட்டாலும் விட்டு விடுவாள். சிங்காரம்—பொன்மணி சங்கதி தெரியுமா என்று ஊரார் பேச ஆரம்பித்து விடுவார்கள். அதை வைத்துக்கொண்டு கற்பூரம், தன் அண்ணன் திருமணத்தைத் தன் இஷ்டப்படி முடித்துக் கொள்வாள். இதோடு போகிறதா—அந்தக் கரகமாடி கண்ணன் வேறு இந்தச் சாக்கில் பேய் ஓட்டுபவனைப் போல வந்து வீடெங்கும் விழி யோட்டுகிருன். அவன் அடிக்கடி வீட்டுக்கு வருவது பெரிய ஆபத்து—எந்த சமயத்தில் எப்படி நடந்து கொள்வானே தெரியாது—இது போன்ற குழப்பமான எண்ணங்கள் பொன்மணியின் இதயத்தைக் கனமாக்கின. எல்லாவற்றுக்கும் பரிகாரம், எப்படியாவது சிங்காரம் வீட்டை விட்டுப் போய் விடுவதுதான்! தெய்வத்தின் கட்டளை-தேவதை ஆவேசம் வந்து கூறியதே என்ற பயம் சிறிது நேரம் தலைகாட்டியது. கற்பூரத்தின்மீது இருந்த கோபத்தில் அந்தப் பயமெல்லாம் நீடித்து நிற்கவில்லை.

அவள் சிந்தனையைக் கலைக்கும் வகையில் சிங்காரம், "தண்ணி! தண்ணி!" என்று சப்தம் போட்டான்.

பொன்மணிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "அம்மா! அம்மா!"-கூப்பிட்டுப் பார்த்தாள். குறட்டை ஒலி கொஞ்சம் நின்று மீண்டும் துவங்கியது. முன்னைவிட பலமாக! எழுந்து அம்மாவிடம் சென்ருள். அதிக சப்தம் போட்டு எழுப்பினுல், நோயாளியான அப்பா விழித்துக்கொண்டு விடியுமட்டும் தொந்திரவு பொறுக்காமல் கஷ்டப்படுவாரே யென்று சங்கடப்பட்டாள். ஈன சுரத்தில் "அம்மா!" என்ருள்.

அதற்குள் "பொன்மணி!" என்று சிங்காரம் மெல்ல அழைத்தான். அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தண்ணீர் கேட்கத்தான் அவன் அழைக்கிருனு — அல்லது தவருன எண்ணத்தோடு அழைக்கிருனு? அவளுக்கு நெஞ்சு படபடத்தது. மௌனமாகவே இருந்தாள்.

மறுபடியும் "பொன்மணி!" என அழைத்தான். அவள் பேசவில்லை.

"தயவு செய்து கிட்டவா தங்கச்சி!" என்ருன். அந்த அழைப்பில் அன்பு இழைந்தது. பரிதாபம் தலை காட்டியது. கெஞ்சுதல் மிஞ்சியிருந்தது. பொன்மணிக்கு அவளையறியாமல் ஒரு மன எழுச்சி! "தங்கச்சி!" என்ற சொல்லில் பொதிந்திருக்கும் உறவையும் உண்மை அன்பையும் அவள் மதிக்கத் தவறவில்லை.

"என்னண்ணே வேண்டும்?" எனக் கேட்டபடி அருகே சென்ருள்.

"தங்கச்சி!...என் நிலைமையை நீயாவது யோசிச்சுப் பாரும்மா! எனக்குப் பேயும் பிடிக்கலே; மண்ணும் பிடிக்கலே! எல்லாம் அக்கப்போர். என் தங்கை கற்பூரத்துக்கு வர்ர ஆவேசத்தினுல் வந்த வினை இதெல்லாம். என்னைத் தப்பா நினைக்காதே—இதுதான் சமயம்—கட்டுக்களையெல்லாம் அவிழ்த்து விட்டுட்டு கதவையும் திறந்துவிடு. நான் ஓடிப்போறேன். முதல்ல கொஞ்சம் தண்ணி கொடு!"

சிங்காரத்தின் வேண்டுகோளில் இருந்த பரிவைக் கண்டு மனமுருகினுள் அவள். தண்ணீர் கொண்டுவந்து தந்தாள்.

அதைக் குடித்த சிங்காரம் "ஒரு திரான் சாராயம் அகப்பட்டதுன்னு இந்த உடம்பு வலி தீரும்" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

பொன்மணி எதுவும் பேசவில்லை. பிறகு அவளைப் பார்த்து சிங்காரம், "தயவு செய்து என்னை விட்டு விடு தங்கச்சி—எனக்கு பேயுமில்லை; ஒண்ணுமில்லை!" என்று மறுபடியும் மறுபடியும் கெஞ்சினுன் சிங்காரம்.

"நீங்க உள்ளபடியே என்னைத் தங்கச்சியாகத்தானே நினைக்கிறீங்க?"—பொன்மணி நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

"ஆமாம் — அதிலே ஏன் உனக்கு சந்தேகம்?" என்ருன் அவன்.

"இல்லே......உங்க தங்கச்சி கற்பூரம் இருக்காளே; அவள் உங்களைப்பத்தி எனக்கிட்டே சொன்னது வேற விதம்!"

"என்ன விதம்? சொல்லும்மா; சொல்லு!"

"நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள..."

"ஓகோ......உன்னைக் கல்யாணம் செய்துக்க விரும்புறேன்னு சொன்னதா என் தங்கச்சி?... பொன்மணி! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை நான் உன்னை எப்போதும் என் தங்கச்சியாகத்தான் நினைக்கிறேன்!"

"அப்பாடா! என் மனசு நிம்மதியாச்சு...!" என்றவாறு அவனது கட்டுக்களை அவிழ்த்து விட்டாள் பொன்மணி.

அவனும் சிரமத்தோடு எழுந்து உட்கார்ந்து, "உனக்கு ரொம்ப நன்றி தங்கச்சி! தெருக் கதவையும் அப்படியே திறந்து விடு!" என்று கேட்டுக் கொண்டான்.

அவள், அவனை மெதுவாகக் கைபிடித்து அழைத்துக் கொண்டே "அண்ணே! நான் தான் உங்களை வெளியே அனுப்பினேன்னு யாருகிட்டயும் சொல்லிடக் கூடாது!" என்று கேட்டுக்கொண்டாள். அவனும் அதற்குத் தலையசைத்துச் சம்மதம் தந்தான்.

தெருக் கதவு திறக்கப்பட்டது. சிங்காரம் நன்றியோடு பொன்மணியைப் பார்த்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினுன். பொன்மணி, கதவைத் தாளிட்டுவிட்டு தன் இடத்திற்கு வந்து படுத்தாள்.

அவள் படுப்பதற்குள் தெருப் பக்கத்தில் பயங்கரமான சப்தம்!

"அய்யோ!" என்ற பெருங் கூச்சல்!

பொன்மணி திடுக்கிட்டெழுந்தாள்; "அம்மா! அப்பா!" என்று அவளையுமறியாமல் அலறியபடி!

பூஞ்சோலை, பொன்னையா—இருவரும் விழித்துக்கொண்டார்கள்!

பொன்மணி, ஓடிப்போய்த் தெருக் கதவைத் திறந்தாள்!

அவள் வீட்டுக்கு எதிரே ஒரு முரட்டுக் காளை — அதன் கொம்புகளுக்கு நேரே ஒரு ஆள்! அந்த ஆள் தெருவிலே கிடந்தான்! அவனை சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை! பந்துபோல் உருண்டு கிடந்த அவனிடமிருந்து இப்போது ஒலியில்லை! காளைமட்டும் மூர்க்கமாக அவனை முட்டித்தள்ளி தெருவில் உருட்டிக்கொண்டேயிருந்தது!



திருவாரூர் மாநாடு அறிவிப்பு.

மன்னார்குடியில் நடைபெற்ற தஞ்சை மாவட்டக் குழுவில் தீர்மானித்தபடி ஒவ்வொரு கிளைக் கழகமும் நன்கொடையாக பத்து ரூபாய் அனுப்ப வேண்டியதை ஏப்ரல் மூன்ரும் வாரத்திற்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறேன்.

மு. கருணாநிதி,
பொருளாளர்.
தஞ்சை மாவட்ட 3-வது மாநாட்டு அலுவலகம்,
சன்னதித் தெரு, திருவாரூர்.

விற்பனையாகிறது ஏப்ரல் இதழ்!

சத்தான கருத்துக்கள்—
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப் பேரிதழ்...
திசை எட்டும் புகழ் பரப்பும்
தீந்தமிழ்க் கருவூலம்!

முத்தாரம்

புலவர் குழந்தை
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை
கே. ஏ. மதியழகன்
நாஞ்சில் கி. மனோகரன்
கவிஞர் வாணிதாசன்
ஆகியோரின் எழுத்தோவியங்கள்!

இத்தனையும் உண்டு — சத்தனைய இன்னும் பல உண்டு!

வாழ்க மணமக்கள்!

சென்ற 30—3—58 ஞாயிறு காலை 11 மணிக்கு, சேலம் மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் திரு. ப. இராமலிங்கம் அவர்கள் மகள் செல்வி கலைச்செல்விக்கும், கோவை செல்வபுரம் திரு சென்னியப்பன் மகன் செல்வன் அரங்கநாயகன் அவர்களுக்கும் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

மணமக்களுக்கு நமது வாழ்த்துக்கள்!

சிப்பியில் விளையாத...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

பாவம், அவர்களுக்கு நேரம் ஏது இந்தக் 'கோர'த்தைக் காண? அவர்கள் நினைவெல்லாம் தேர்தல்...ஓட்டு...மந்திரிப் பதவி...இத்யாதி ...இத்யாதி...!

ஆகவே ஆயிரம் ஆயிரம் குடும்பங்களின் இன்பம் பறிக்கப்பட்டது! ஆதரவற்றவர்களாய், அனாதைகளாய் அலைய ஆரம்பித்தார்கள். மற்றவர்களின் உடலை மறைத்த அவர்களது மானத்தை மறைக்க யாருக்கும் மனமில்லை; வக்கில்லை; ஆசையில்லை; இரக்கமில்லை!

இத்தகைய குடும்பங்களில் —இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த குடும்பங்களில் ஒன்றுதான் பார்வதி — பரமசிவத்தின் குடும்பமும்! ஆசை மனைவி — அன்புக் குழந்தை— இன்ப வாழ்வு—இந்தத் தென்றலில் தவழ்ந்து கொண்டிருந்த அவர்களது வாழ்வைக் காலம் தட்டிப் பறித்துக் கொண்டு விட்டது! வறுமை அவர்களின் வாழ்வில் நீங்காதபற்று கொண்டது, தொத்து நோயைப் போல! வேலை தேடி அலுத்த பிறகு வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள பிச்சை எடுக்க ஆரம்பித்து அதிலும் தோல்வியைத் தழுவினர். எங்கு சென்றாலும் ஏமாற்றம்......... ஏமாற்றம்தான்...மனிதன்தான் ஏமாற்றினான் என்றால் ஆண்டவனும் அவர்களை ஏமாற்றினான்!

கடந்த ஐந்து நாட்களாக அவர்கள் பட்டினி! வயிறு காய்ந்தது — நாக்கு உலர்ந்து விட்டது! பச்சிளம் குழந்தை —அச்சடித்த பதுமை — ஒரு பாலாடை பால்கூட இல்லாமல் சுருண்டு விட்டது. அவர்கள் கடைசியாக சாப்பிட்டதெல்லாம் ஒரு 'ஹோட்டல்' வாசலில் வீசி எறியப்பட்ட இலையில் யாரோ தர்மப் பிரபு விட்டுச் சென்ற சிறிது உணவுதான்! அதை அவர்கள் நாக்கால் வழித்து உண்ட காட்சிதான் அவர்கள் நினைவில் நிலைத்திருந்தது! மற்ற எண்ணங்கள் — காதல்......மகிழ்வு......எல்லாம் இதயத்தில் நித்திரை செய்து கொண்டிருந்தன!

நேற்றுதான் அவர்களுக்கு தகவல் கிடைத்தது. பணம் படைத்த குணக்கேடர்கள்— நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து உல்லாச வாழ்வு வாழும் சல்லாபபுரிவாசிகள்— 'சிசு'க்களை வாங்குகிறார்கள் என்று! சிறிய தொகைக்கு சிங்கார விளக்குகளை—சின்னப் புது மலர்களை கைமாற்றிக் கொண்டார்கள். எல்லாம் ஒரு கவள உணவிற்கு! அப்பப்பா... என்ன கொடுமை! இதயம் படைத்தவர்கள் இந்த வியாபாரத்தைக் கொடுமை என்பர்! ஆனால் இரும்புப் பெட்டி பெற்றவர்கள் இதை பரஸ்பர உதவி என்பார்கள்! என்ன விசித்திரமான உலகம்! இந்த இரண்டு முனைகளும் ஒன்றுவது எந்நாள்? இரு துருவங்களும் சந்திப்பது எந்நாள்? ஏழைகளின் இருண்ட வாழ்வில் உதயமே இல்லையா?

பார்வதி பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை— தனது சதையின் சதையை— தனது ரத்தத்தின் ரத்தத்தை —இறுக அணைத்துக் கொண்டாள். ஒரு கவள உணவிற்காக தனது ரத்தத்தால் வளர்த்த புத்திரியை-பாலூட்டி சீராட்டி வளர்த்த தளிரை— சீவி சிங்காரித்து அழகு பார்த்த பிறையை—மழலை மொழியால் சிந்தையைப் பறித்த செந்தாமரையை விற்கத்தான் வேண்டுமா? உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த தனது மார்பகத்தை—ஒரு துளி பாலையும் சுரக்காத அந்தத் தசையை— பிசைந்து கொண்டாள்! ஒரு துளி—ஒரே துளி பால் அந்த மார்பகங்கள் சுரக்கக்கூடாதா, தனது கிளியின் பசியைப் போக்க?

எண்ணெயற்று 'சடை'பிடித்திருந்த கூந்தலை மெதுவாகத் தொட்டான், பரமசிவம்!

“பார்வதி! இங்கே பார், வேறு என்ன செய்ய முடியும் நாம்? சாவின் கோரப் பிடிக்குள் இந்தச் சிசு சிக்குவதற்கு முன்னால் விற்றால் எட்டணாவாவது கிடைக்கும்! நமக்கு ஒருவேளை உணவாவது கிடைக்கும்!”

கேவலம் எட்டணாவுக்கு தங்களது குயிலின் குஞ்சை விற்கத்தான் வேண்டும்! எட்டணா அவர்களுக்கு ஒருவேளை உணவு! ஆனால், மாடி வாசிகளுக்கு...?

பார்வதியின் விழிகள் நீர் வீழ்ச்சிகளாயின! அவளது உலர்ந்த உடல் நடுங்கியது! குலுங்கிக் குலுங்கி அழுதாள்! அயயோ, பசியே! வறுமையே! நீ இந்த வையகத்தை விட்டு ஓடும் நாள் எந்நாள்?

பரமசிவம் குழந்தையைத் தூக்கிக் கொண்டான்! பார்வதி அலறினாள்: “இன்னும் ஒருநாள் நம்முடன் இருக்கட்டும்! நாளை விற்று விடுவோம்!...”

“பைத்தியக்காரி! இரண்டொரு மணி நேரம்தான் அதனுயை வாழ்வு......அதற்குள்... அதற்குள்...”

பரமசிவம் வெளியேறினான். பார்வதி தனது சக்தியை எல்லாம் திரட்டி பின் தொடர முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி நடந்தாள்-பட்டும் பீதாம்பரமும் உடுத்தியவர்கள்-பொன்னும் மணியும் பூண்டவர்கள்— புன்னகையை தங்களது ஏகபோக அடிமையாக்கிக் கொண்டவர்கள்-எல்லோரும் அவளது கண்களில் தென்பட்டார்கள். அவர்களைக் காணவே அவளது கண்கள் கூசின. அவர்கள் ஏழைகளின் வாழ்வைப் பறித்துக் கொண்டவர்கள் — வறுமையை இந்த வையகத்தில் விதைத்தவர்கள்!

அவளால் நடக்க முடியவில்லை. எப்படியோ தட்டுத் தடுமாறி அருகிலிருந்த கோவிலின் வாசலை அடைந்தாள். சுருண்டு விழுந்தாள். தன் நினைவையும் இழந்தாள்.

எவ்வளவு நேரம் அவள் அப்படி விழுந்து கிடந்தாளோ— அவள் கண் விழித்தபோது எங்கும் காரிருள், அவள் வாழ்வைப் போல்!

அடுத்த வினாடி அவளது விழிகள் அகலமாகத் திறந்தன. இருளில் ஊடுருவி நோக்கினாள். துணியால் மூடப்பட்ட குழந்தை ஒன்று அங்கு கிடந்தது! ஆண்டவன் சன்னிதானத்தில் யாரோ அந்தக் குழவியை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். ‘மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமலா விடப் போகிறான்’ என்ற வரட்டு வேதாந்தத்தை நம்பியவர்களாக இருக்கலாம்; அனந்த ஜீவராசிகளையும் காப்பாற்றும் கடவுள் இந்தச் சிறிய சதைப் பிண்டத்தை ரட்சிக்காமலா போகப்போகிறான்—என்று... எண்ணிய எந்தத் தாயோ பாவம்! வறுமையால் வாடியதோ, அல்லது வழி தவறிப் பிறந்ததோ; எப்படியோ கோபுரத்தின் நிழலில் நர்த்தனம் செய்யும் நாரீஸ்வரரின் காலடியிலே புரண்டு கொண்டிருந்தது அப் பூமாலை!...

“குவா, குவா” — சிறு அலறல்...

பார்வதியின் கரங்கள் குழவியைத் தழுவின!

பசியின் கொடுமையோ என்னவோ மயான அமைதியை அந்தச் சிறு குரல் கிழித்தது. ஆண்டவனின் பாதார விந்தங்களை பூஜித்துக்கொண்டிருந்த பூசாரியின் விரதத்தை இக் குரல் கலைத்தது. ‘பூஜைவேளையில் புகுந்த கரடி யார்?’ என கோபம் கொப்பளிக்க, விளக்கேந்தி வாயிலுக்கு வந்தார் ஆண்டவனின் தூதுவர்!

“ஏன் என் அமைதியை— பூஜையைக் கலைத்தீர்கள்?— போ, போ, குழந்தையை எடுத்துக்கொண்டு......” — விரட்டினான் அந்த வீணன்.

பரமண்டலத்திலிருக்கும் பரம பிதாவை பூஜிக்கும் கிறிஸ்துவப் பாதிரியின் கண்ணிலே ஒரு குழந்தை தென்பட்டால் தன் மதத்திலே சேர்த்து, அதை அனாதை விடுதிக்கு அனுப்பி ஆளாக்குகிறான். நபிநாயகத்தைத் தொழும் முல்லா, முகமதியனாக்கி முழு மனிதனாக்குகிறான். ஆனால் இந்து மத சனாதனியின் கண்களுக்கு ஒரு குழந்தை பாவ மூட்டை—விபசாரத்தின் வித்து—வேண்டாத ஒன்று! என்னே இந்து மதத்தின் சித்தாந்தம்—பெருமை— புகழ்!

மீண்டும் விரட்டினான் பூசாரி. பார்வதி குழந்தையை மார்புறத் தழுவிக்கொண்டாள். “என் குழந்தை—என் செல்வம்—என் ராஜா”—அவள் வாய் முணுமுணுத்தது.

மீண்டும் எங்கிருந்தோ பலம் பெற்றாள். அவளது கால்கள் குடிசையை நோக்கிப் பாய்ந்தன. ஒருவேளை உணவிற்காக அவளது சொந்த செல்வம் விற்கப்பட்டபின் இந்த இரவல் குழந்தையை எதற்காக எடுத்துச் செல்கிறாள்? இதை எப்படி காப்பாற்றப் போகிறாள்? என்னதான் செய்யப்போகிறாள்?

பரமசிவம் அவளுக்காக வாசலில் காத்திருந்தான். பார்வதி பயத்தால் நடுங்கினாள். இந்தக் குழந்தையைக் கண்டதும் அவன் என்ன சொல்லுவான்? ஒருவேளை இந்த மழலையையும் எட்டணாவுக்கோ பத்தணாவுக்கோ அவன் விற்றுவிடக் கூடும்!

குழந்தையைத் தழுவியவாறே விழுந்தாள், பார்வதி! பரமசிவத்தின் கண்கள் அந்த ‘மூட்டை’ மீது விழுந்து பின் பார்வதியின் திசையில் திரும்பின! பார்வதி குழந்தையை இறுகத் தழுவிக்கொண்டாள்.

“அத்தான்—இங்கே பாருங்கள் இந்தத் தங்க விக்ரகத்தை! என்ன அழகாக இருக்கிறது? இதை விற்கக்கூடாது அத்தான்; விற்கக் கூடாது! என் ரத்தத்தால் இதை வளர்க்கப் போகிறேன்...அத்தான்!”

அவன் பேசவில்லை...“உள்ளே வா பார்வதி...!” என்றான். அங்கே கயிற்றுக் கட்டிலில் வழக்கம் போல அவர்களது செல்வம் கிடத்தப்பட்டிருந்தது. பார்வதியின் நயனங்கள் அக்காட்சியை விழுங்கிக்கொண்டிருந்தன.

“பார்வதி...அதோ, நம் ராணி —நம் குல விளக்கு—அதை விற்க என் இதயம் இடம் தரவில்லை...”

பார்வதி ஓடிச் சென்று அவளது சதையின் பிண்டத்தை வாரி அணைத்தாள். அந்தோ... அது மாண்டு பல மணி நேரமாகி இருந்தது! வாழ வழியின்றி வாடிய அந்த அரும்பு கருகிவிட்டது! ஒரு வினாடி மகிழ்ச்சி கொப்பளித்த அந்தக் குடிசையிலே அலறல்...புலம்பல...கண்ணீர்...!

“பார்வதி! கடலில் குளித்தொரு முத்தெடுத்தோம்... அது கைநழுவிவிட்டது! இதோ நம் சிப்பியில் விளையாத முத்து! இதை கண்ணிமைகளுள் வைத்துக் காப்போம்! வாழ்வோ, சாவோ, எது வந்தாலும் இனி தெருவிலே ‘குழந்தையோ குழந்தை’ என்று கூவவே மாட்டேன்...நம் அகல் விளக்கு அணைந்துவிட்டது! இந்தக் குத்துவிளக்கு நம் வாழ்வில் ஒளி வீசட்டும்!”

அவர்களது கண்களிலே கண்ணீர் துளிர்த்தது! அது இதய இன்பத்தின் தேன் துளிகளா? இதய வேதனையின் இரத்தத் துளிகளா?

விற்பனையாகின்றன!

* அழகு தமிழ்ப் பூக்காடு!
* அரசியல் விளக்க ஏடு!
* உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்!

மு. கருணாநிதியின்

உதய சூரியன்

விலை ரூ. 1—50

* உணர்ச்சி மிக்க காவியம்!
* உன்னதமான ஓவியம்!
* தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு!

பி சி. கணேசன் எழுதிய

எழுத்தாளன் காதலி (நாடகம்)

விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை சாலை, திருச்சி-8.

[தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 25 புதுக் காசு சேர்த்து அனுப்புக.]

உயர் எண்ணங்கள் மலர்ந்த சோலை

பாலையான பரிதாபம் பாரீர்!

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

--இவை மலிந்துவிட்டன அதிலே!

"கலைத்துவிடுவோம், காங்கிரசை!" என்று காந்தியார் குறிப்பிட்டார். ஆனால் இன்றைய தினம், அது தானே கலைந்துவிடுமோ என்ற நிலை அரும்பிவிட்டது கண்டுதான் கலங்குகிருர் தேபர்!

மேற்கு வங்கம் — தேசிய போராட்டத்துக்கு வீரர்கள் பலரை அனுப்பிவைத்த பூமி— தாயக விடுதலையில் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட பகுதி! அங்கிருக்கும் காங்கிரஸ் ஆட்சியில், சட்ட மன்ற பெண் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவரின் உயிருக்கே உலை வைக்கும் பயங்கர நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது!

அஞ்சலிகான் என்ற அந்த பெண் உறுப்பினர், ஆசிரியர்கள் சம்பளம் குறித்து மந்திரி சபைமேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஆமோதித்திருக்கிருர்; ஆதரித்துப் பேசியும் இருக்கிருர். நடுச் சபையிலே காங்கிரசையே எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினரல்லவா அவர்; ஆகவே அவருக்குப் போலீஸ் பாதுகாப்பும், தனி இட வசதியும்கூடத் தரப்பட்டதாம்! அப்படியிருந்தும் அவருடைய நாற்காலியின் கீழ் தோட்டா ஒன்று வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நீதிக்கும் நேர்மைக்கும் வழி வகுக்க இருக்கின்ற சட்ட மன்றத்தில், பழி வாங்கும் பண்பிலே இந்த பாதகச் செயல் நடைபெற்றிருக்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது!

அதோடுமட்டுமல்ல; மேற்கு வங்கத்தின் சட்ட மன்றச் சுவர்களிலே மோதி எதிரொலித்தது, அங்கு காங்கிரஸ் நடத்துகின்ற கண்மூடி தர்பாரின் நடவடிக்கைகள்:

"வங்காளத்தை வாழவோ, முன்னேறவோ விடாது நீங்கள் அழைத்துச் செல்லும் அழிவுப் பாதை, கட்சியையும், ஆட்சியையும் நாட்டையும், மக்களையும் படு நாசத்தைத் தான் அடையச் செய்யும்......

"ஒழுக்கங்கெட்ட — ரத்தம் செத்த சமுதாயத்தை வளர்க்கவே காங்கிரஸ் பாடுபடுகிறது...

"இந்த அக்கிரமங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லையானுல், என்னைப் போல் வெளியேறுவதுதான் தடையின்றி நிகழும். நான் முயற்சித்தேன்; தோற்றேன்; ஏமாற்றத்தோடு வெளியேறினேன்!"

—தான் வகித்து வந்த நீதி அமைச்சர் பதவியை வெறுத்து உதறி விட்டு வெளியேறிய சித்தார்த்த ரேதான் இப்படி குமுறியிருக்கிருர். அவர் குவித்த குற்றச்சாட்டுகளை — லஞ்ச, ஊழல் நிகழ்ச்சிகளை மறுக்கவே இல்லை அந்த காங்கிரஸ் அமைச்சரவை, வாய்மூடி மௌன நிலையில் இன்றளவும் இருக்கிறது, அந்த வங்கத்து அரசு!

ஆனுல், தேபர்...அவரால் உள்ளத்து வேதனையை வெளிக்காட்டாது இருக்க முடியவில்லை. ஆகவேதான், மேற்கு வங்கத்தின் திசையில் திரும்பி தனது புருவங்களை நெறிக்கிருர்.

காங்கிரஸ் அமைப்பின்மேல் மட்டுமே குறை கண்டு வருகிருர் தேபர் என்றல்ல பொருள்; தனிப்பட்டவரை சுட்டிக் காட்டியும் "பொய்யர்கள்" என்று தாக்கி இருக்கிருர் அவர்!

பீஹார் காங்கிரசில் தென்படுகிற புண் இது:

அங்கு காங்கிரசுக்குள்ளேயே 'குத்து, வெட்டுகள்' சர்வசாதாரணமாக நிகழுமாம்; கமிட்டிக் கூட்டம் என்ருலே 'நவகாளி மாதிரி' தெரியுமாம்! அங்கே சென்ற பொதுத் தேர்தலின்போது காங்கிரசைக் கவிழ்த்துவிட பயங்கரச் சதியே நடைபெற்றதாம். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் மாற்றுக்கட்சித் தோழர்கள் என்றுதானே நாம் கருதுவோம்!

அப்படியல்ல; அங்கு நன்கு தழைத்திருந்த காங்கிரஸ் விழுதை அழித்து ஒழிக்க முயற்சித்த கோடரியும் காங்கிரஸ்தான்! அங்கிருக்கும், 'கும்பல் சண்டை'தான் இப்படி குலை நடுங்கச் செய்யும் செய்தியை வெளியிட்டிருக்கிறது!

ஆகவேதான் பீஹார் காங்கிரசைத் தாங்கி நிற்கும் தூண்களாகக் கருதப்பட்ட நாற்பத்து மூன்று பிரமுகர்களை விலக்கி விரட்ட வேண்டிய நிலைக்கு இன்று மேலிடம் துரத்தப்பட்டிருக்கிறது. சம்மந்தப்பட்டவர்களை தேபர் தாக்கிப் பேசியிருக்கிருர் இன்று. 'குலைகிறதே கோலோச்சும் அமைப்பு' என்ற சோகம் கோபமாக மாறி, 'பொய்யர்கள், புரட்டர்கள், புழுவுக்குச் சமமானவர்கள்!' என்று புலம்பி இருக்கிருர்.

அதைவிடக் கேவலமான— அவமானப் படத்தக்க செயலை செய்து விட்டனர், உத்திரப் பிரதேசத்திலே இருக்கின்ற சட்ட மன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்.

இந்திய அரசாட்சியின் சூத்திரக் கயிறே அங்குதான் இருக்கிறது என்று பெருமைப்படுவார்கள் —நாட்டுக்கேற்ற நல்ல தலைவர்களைப் பெற்று, வளர்த்து, உருவாக்கித் தருகின்ற மண் என்று பூரித்துக் கொள்வார்கள்! ஆனுல் அங்குதான், டெல்லி மேல்சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலின் போது 'காங்கிரஸ் குழப்பம்' தலைதூக்கி, வெட்கக் கேடான செயலையும் செய்து விட்டது!

அந்தத் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் நிறுத்தப்பட்டார். ஆனுல் அவருக்குக் கிடைக்கவேண்டிய காங்கிரஸ் ஓட்டுகள் அத்தனையும் கிடைக்கவில்லை! சட்ட மன்றத்திலே காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் — நடைபெறுவது காங்கிரஸ் சர்க்கார் என்பதை மறந்துவிடக்கூடாது! அப்படிப்பட்ட காங்கிரசின் ஓட்டுகள் பல பிரிந்து — ஜனசங்க அபேட்சகர் ஒருவரது பெட்டியிலே விழுந்து — அந்த அபேட்சகர் பண்டித பந்தை விட அதிக ஓட்டுகள் வாங்கும்படிச் செய்திருக்கின்றன!

காங்கிரசின் ஓட்டுகள் இப்படி திசை மாறிப் போவானேன்? — தேபர் நேருவைப் பார்த்துக் கேட்கிருர்.

[தொடர்ச்சி—கடைசி பக்கம்]

மேலிடத்து நடவடிக்கை!

காங்கிரசில் மலிந்துவிட்ட ஒழுக்கக் கேட்டைத் தடுக்க எல்லோரும் தயாராக நிற்கிருர்கள். —'சங்கர்ஸ் வீக்லி'

ராவணனின் கண்ணீர்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சில தமிழர்கள் இசையும் பாடுகின்றனர்! இதை எதிர்த்து சென்ற ஆண்டு இராமர் படத்தை எதிர்த்து புரட்சி செய்த பெரியார் இன்று சிறையிலே வாடுகிறார்! என்னைப் புகழ்ந்து எழுதப்பட்ட இராவண காவியத்தின் மேலுள்ள தடை இன்னும் நீங்கவில்லை!

மேலும், இந்த நிலையிலே ஆட்சியாளர்கள் தம்மை வெட்கமில்லாமல் 'தமிழர்கள்' எனக் கூறிக் கொள்கின்றனர்! பச்சைத் தமிழரென்ற பெயர் சூட்டி, ஒரு சிலத் தமிழர்களும், அவர்களை வாய் கூசாமல் அழைக்கின்றனர்! ஊம், தமிழர்களே! நானும் வெட்கமின்றி உங்களிடம் முறையிடுகிறேன்! என் முறையீடுகளெல்லாம் செவிடன் காதிலே ஊதப்பட்ட சங்கொலியாகத்தான் ஆகிவிடுமோ என்னவோ!...

என்னை அவமானப்படுத்தியதற்காக நான் எள்ளளவும் வருந்தவில்லை! என்னைக் கொன்ற இராமனையே நான் மன்னித்து விட்டேன்! தன்னையே சிலுவையிலறைந்தவர்களைக்கூட, "எந்தாய்! தாம் செய்வது இன்னதென அறிகில்லார்!......இவர் பிழையை மன்னியு"மெனக் கனிவாய் மொழிந்த இயேசுவின் கதையைக் கேட்ட நான், என் உருவத்தைக் கொளுத்தும் பேரிடிகளைக் கண்டா வெறுப்பு கொண்டு வருந்துவேன்?

ஆனால் என் அன்புக்குரிய தமிழன்னை பழிக்கப்படும்போது என்னால் வருந்திக் கண்ணீர் விடாமல் இருக்க இயலவில்லை! தமிழன்னையின் வளர்ச்சிக்காக தன் உயிரையே கொடுத்த அரசர்கள், கவிஞர்கள் கதைகளையெல்லாம் கேட்டிருக்கிறேன்! தமிழ்க் கவிஞரை மகிழ்விக்கத் தலையையே ஈந்த கொடை வள்ளல் குமணன் கதையைக் கேட்டுக் களிப்படைந்தேன்! பல்லவப் பேரரசனாகிய 'தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்' கதை தெரியுமா உங்களுக்கு?

அவன், தமிழ்க் கவிதையைக் கேட்பதற்காக தன் நாட்டையே இழந்து, சுடுகாட்டின் சிதையிலே நின்றபடி கடைசிப் பாடலைக் கேட்டவாறே உயிரை விட்டானும்!

தமிழைக் கற்ற மேனாட்டு அறிஞர்களெல்லாம், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்!" என்று பாராட்டியுள்ளனர்! தமிழைக் கற்க இன்றும் திரு. செபிலேவ் போன்ற அறிஞர்கள், பல திசைகளிலிருந்தும் தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்!

ஆனால்...தூய தமிழ் முழங்கிய இலங்கையிலே தமிழ் ஒழிப்புப் போராட்டமா? தமிழ் ஆட்சி செய்த இலங்கையிலே தமிழ் அழிப்புப் போராட்டமா? ஐயையோ! தமிழா!... மானம் போகிறதடா!......... தமிழன்னையின் மானம் போகிறதடா!

தாயின் மானத்தைக் காக்க முயன்ற தன்மானத் தமிழர்களைத் துப்பாக்கிக் குண்டுகள் பலி கொண்டு விட்டன!

ஏ, இலங்கை மாநகரே! உன்னுடைய கல் வெட்டுக்கள் தமிழ் பேசவில்லையா?...உன்னுடைய பொருட் காட்சி நிலையங்களிலே உள்ள பழம் பெருஞ் சுவடிகள் தமிழ் பேசவில்லையா?...நீ எப்படித்தான் தமிழ் அழிப்புப் போராட்டத்திலே வெற்றியடையப் போகிறாய்? தமிழர்கள் யாவரையும் அல்ஜீரிய மக்களைப்போல் சுட்டு வீழ்த்தினாலும், தமிழிசையைத் தாங்கியுள்ள தென்றல் காற்றைக்கூட உன்னால் கொன்றுவிட முடியுமா?

ஓ! இலங்கை அரசே!

தேமதுரத் தமிழின் ஓசையை முழங்காமல் செய்ய உன் துப்பாக்கிக் குண்டுக்குச் சக்தி உண்டா?

எதற்காக இந்தக் கொடுமை? தமிழர்கள் மொழி வெறி கொண்டு உங்கள்மீது தமிழைச் சுமத்தினார்களா? இல்லையே! ஆண்டு கொண்டிருந்த தமிழை நீக்கிவிட்டு சிங்களத்தை ஆட்சி மொழியாக்கியதை எதிர்த்ததா தமிழரின் தவறு? தமிழ் எழுத்துக்களை அழித்து சிங்கள எழுத்துக்களைப் பொறித்ததை எதிர்த்ததற்கா துப்பாக்கிக் குண்டுகள்?

இந்தி மொழி வெறியர்களிடம் இன்னலுறும் தமிழர் கூட்டம் தமிழகத்திலே! சிங்கள மொழி வெறியர்களிடைச் சிக்கித் தவிக்கும் தமிழர் கூட்டம் இலங்கையிலே!...... அந்தோ, தமிழா! உன் கதி இதுவா?...

அடப் பாவிகளா!...தமிழன் படையெடுத்தால் 'மதில்கள் இடிந்து பொடிப் பொடியாகுமே! பதி எரியுமே! புகை எழுமே! பொழிலெல்லாம் மடியுமே!' என்றெல்லாம் புகழ்ந்த உங்களின் நாக்கா இன்று தமிழைப் பழித்திடத் துணிந்தது? இலங்கையில் என் தம்பி விபீடணனைப் போன்றவர்களின் கூட்டம் அதிகரித்துவிட்டதா? அல்லது தமிழர்கள் யாவரும் என் தம்பி கும்பகர்ணனைபபோல் குறட்டை விட்டுத் தூங்கி விட்டனரா?

ஐயோ. தமிழன்னையே!...தமிழகத்தில் இந்தி வெறியன் உன்னைத் துரத்துகிறான்! இலங்கையிலே உன்னைச் சிங்கள வெறியன் துரத்துகிறான்! இந்தி வெறியனுக்கு உன்னை அடிமைப் பெண்ணாக்க, விலை கூறும் வீணர்கள் தமிழகத்தில்! சிங்கள வெறியன் கையிலே சிக்க வைத்துத் தவிக்கவிடத் திட்டமிட்டு வேலை செய்யும் வீணர்கள் இலங்கையிலே!

அந்தோ, தமிழன்னையே!...என்னுடைய இன்றைய நிலை இதுவென்றால் உன் நிலையும் அதுதானா?...நான்... இலங்கை மன்னன்...இணையற்ற வீரன்...இராவணன் தான்...ஆனால் இப்பொழுது உயிரற்ற இராவணனாகிய நான் உன்னை எப்படிக் காக்க முடியும்?...உன்னுடைய இந்த நிலை கண்டு கலங்குகிறேன்! கதறி அழுகிறேன்! கண்ணீர் விடுகிறேன்!...என்னுடைய அழுகுரல் பண்டிதரின் காதிலேதான் விழுமா? பண்டாரநாயகாவின காதிலேதான் விழுமா?...

பெரும் பதவி வகிக்கும் அந்தப் பெரிய மனிதர்களுக்கு என் அழுகுரல் எங்கே கேட்கப் போகிறது? ஆனால் தமிழன்னை நிலை குறித்து ஏங்கித் தவிக்கும் ஆயிரமாயிரம் தமிழர்களின் காதுகளிலே நான் கதறி அழும் ஒலி நிச்சயம் விழுமென நம்புகிறேன், தமிழர்களே!

பைந்தமிழ் அன்னையின் கண்ணீரைத் துடைத்தால், அது என் கண்ணீரைத் துடைத்ததற்கு ஒப்பாகும்! வருகின்ற தமிழ்ப் புத்தாண்டு விழாவிலேயாவது, தமிழன்னையின் கண்ணீரைத் துடைத்து அவளைக் களிப்படையச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்வீர்களென நம்புகிறேன்! உங்களனைவருக்கும் இந்தத் தமிழனின் புத்தாண்டு வாழ்த்துக்கள்! வருகிறேன்!... வணக்கம்!...

—"இன்பபுரியான்"

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிதாங்காமல் துவண்டான் வேம்பு!

"உன்னைக் கொன்று அந்தப் பாவத்தை வேறு நான் சுமக்க வேண்டுமோ? மானம், ரோஷம் இருந்தால் திருக்குளத்தில் விழுந்து உயிரை விடேன்!"

வாய் இப்படி வசைபாட, கை தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. பிரம்புத் தடி அடித்த வேகத்தில் உடைந்தது. அடித்துத் தழும்பேறி விட்ட வேம்புவின் உடல் இனி தாங்கவே தாங்காது! வேம்பு அலறினான்.

"மானம், ரோஷம் இருந்தால் திருக்குளத்தில் விழுந்து உயிரை விடேன்..."

—இந்த வாசகம் அவன் செவிகளில் மட்டுமல்ல; கமலாவின் காதுகளிலும் விழுந்து ரீங்காரம் செய்து கொண்டிருந்தது.

வேம்பு—தங்கச் சங்கிலியை அபகரித்து விட்டான் என்று அபாண்டம் சுமத்தப்பட்ட அந்த ஏழை ஒருமுறை கமலாவைக் கனிவு நிறைந்த கண்களால் பார்த்தான். நீர் திரையிட்டிருந்த அவரது கண்களில் கமலாவின் முகம் மங்கலாகத்தான் தெரிந்தது. மறுகணம் மாளிகையை விட்டு வெளியேறினான், தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு!

"வேம்பூ" என்று அழுது கொண்டே அவன் பின்னால் ஓடியது கமலா.

மாளிகைக்காரர் அதைத் தடுத்து நிறுத்தினார். "அந்தத் தறுதலையிடம் உனக்கென்னம்மா வேலை? உன் கழுத்தை நெறித்துக் கொன்று போட்டாலும் போடுவான்...போ உள்ளே!" என்று இரைந்தார்.

கமலா கீழே சுக்கல் சுக்கலாக உடைந்து கிடந்த பிரம்பை ஒருமுறை பார்த்தது. மறுகணம் அப்பாவின் கோர சொரூபம் கண் முன் தோன்ற உள்ளே ஓடியது.

●

"மானம், ரோஷம் இருந்தால் திருக்குளத்தில் விழுந்து உயிரை விடேன்!..."

தூக்கம் வராமல் படுக்கையிலே புரண்டுகொண்டிருந்த கமலாவின் காதுகளில் இந்தச் சொற்கள்தான் கூர் ஈட்டிகளைப் போலத் தாக்கிக் கொண்டிருந்தன.

வேம்பு—அவன் எங்கே போய் விட்டான்? அவனை மறந்துவிட முடியுமா கமலாவால்?

தூய நற்குணங்கள் கொண்ட அந்தத் தம்பி 'கமலா, கமலா' என்று உயிரை விடுவானே! உடலைச் சிறு துரும்பு தீண்டவும், உடையைச் சிறு தூசு அண்டவும் அனுமதிக்க மாட்டானே! இருபத்து நான்கு மணி நேரமும் உடனிருந்த அந்த உத்தமத் தோழன் எங்கே போய்விட்டான்?

கமலா படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தது. எங்கும் கரிய இருள்—அறைக்கு வெளியே வழக்கமாக வேம்பு படுக்கும் இடத்தைப் பார்த்தது. அந்த இடம் காலியாக இருந்தது. அவனது கிழிந்த பாய் விரிக்கப்படாமல் மூலையிலேயே கிடந்தது!

அப்படியானால் வேம்பு எங்கே?

இந்தக் கேள்விதான் கமலாவின் உள்ளத்தில் எழுந்து நின்றது.

"மானம், ரோஷம் இருந்தால் திருக்குளத்தில் விழுந்து உயிரை விடேன்!"

—அப்பாவின் இந்தக் கோபக் குரல் கமலாவின் நினைவுக்கு வந்து விட்டது. மறுகணம் அதன் சிந்தையிலே ஒரு திடீர் முடிவு; வேம்பு ஒரு சமயம் திருக்குளத்திலே விழுந்துஉயிரைவிட்டுவிட்டானோ?

"ஐயோ! வேம்பூ! வேம்பூ!" என்று அலறியது கமலா. படுக்கையை விட்டு குபீர் என்று குதித்தது. திருக்குளத்தை நோக்கி ஓடியது.

கமலாவின் அலறல் காதிலே விழுந்ததும் நாற்காலியில் சாய்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த மாளிகைக்காரர் விழித்துப் பார்த்தார். அவரது கமலாவை வீட்டில் காணவில்லை. வாசலுக்கு ஓடினார்.

கமலாவின் அலறல் எங்கிருந்தோ எழும்புவதுபோல் கேட்டது. குளக்கரையின் படிகளில் "வேம்பூ ... வேம்பூ! ..." என்று அலறிக்கொண்டே ஓடியதை அவர் கண்கள் பார்த்து விட்டன.

ஓடினார்..."கமலா!...நில்...நில்..." என்று கதறிக்கொண்டே ஓடினார்

பதிலில்லை ... 'தொபீர்' என்ற சப்தத்தைத் தவிர! வேம்புவைத் திருக்குளத்திலே தேடி ஓடிய கமலா கால் வழுக்கி விழுந்து விட்டது. திருக்குளத்தில்!

"ஐயோ!...கண்ணே!" என்று அலறினார் மாளிகைக்காரர்!

கண நேரத்தில் அங்கே ஒரு பெருங் கூட்டமே கூடிவிட்டது! நீருக்குள்ளே குதித்தார்கள், கமலாவைத் தேடி!

கமலா கிடைத்தது; ஆனால் கண் மூடிய நிலையில்! அதோடு மட்டுமல்ல; காலையிலே திருக்குளத்தில் முழுகியபோது கழன்று விழுந்த தங்கச் சங்கிலியும் கூடவே கிடைத்து விட்டது!

ஆனால், அதைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்ட வேம்புவோ எங்கேயோ போய்விட்டான்! பாவம். அவனுக்குத் தெரியுமோ என்னவோ—அவன்மேல் அபாண்டப் பழி சுமத்திய அந்தப் பணக்காரர், இப்போது திருக்குளத்தங்கரையிலே இப்படி உலக பந்தங்களைத் துறந்த முனிபுங்கவரைப் போல வாடுகிறார் என்பது!

-சொர்ணம்

முரசொலி

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

[சந்தாத்தொகையை மணியார்டர் மூலமோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பலாம். இலங்கை, மலேயா போன்ற இடத்திலிருந்து கிராஸ் செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போது தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும்.]

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

நாற்புறமும் கோட்டை வாசல்கள்போல் கோபுரங்கள்—அரண்களைப்போல் மாட வீதிகள்—நீண்ட கரைகள்—நடுவிலே அழகிய வசந்த மண்டபம்—இதுதான் திருக்குளம்!

இப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள், அருகிலே வந்து அந்த ஆபாசக் குட்டையைக் காணாதவர்கள்! பாசி படிந்து, பாதம் பட்டால் குப்புற விழவைக்கும் கரைகள்—அழகிய தாமரை, அல்லி இலைகள் அழுகி மிதக்கும் கரிய நிறக் கலங்கிய தண்ணீர்—கொசுவும் கொடிய நோய்க் கிருமிகளும் தங்களது வாசஸ்தலமாக மாற்றிக் கொண்ட சாக்கடைப் பகுதி—சேறும் சகதியும் நிறைந்த அசுத்தத்தின் சின்னம்!

ஆனாலும் என்ன; அது திருக்குளம்தானே! ஆகவே அந்த அசுத்த நீரும் 'புனித தீர்த்த'மாயிற்று! நோய்க் கிடங்கும் ஆண்டவன் குளித்தெழுகின்ற திருக்குளமாயிற்று!

"குளம் ஐந்து வேலி; கோயில் ஐந்து வேலியாயிற்றே! எத்தனை பெரிய சிறப்பிருக்கும் எம்பெருமானுக்கு!"

"புண்ணிய தீர்த்தமல்லவா? மூக்கைப் பிடித்து முழுகி எழுந்தால், பற்றிய பாபமெல்லாம் நீரோடு கரைந்து விடுமே!"

—பக்தர்கள் அந்த ஆபாசத்திற்கு இப்படி ஆஸ்திக மெருகு கொடுத்தார்கள்!

போகட்டும்...நாம் குளத்தின் நீண்ட கரைகளை ஒரு முறை சுற்றி வருவோமே! அங்கே நாம் பல காட்சிகளைக் காணலாம். தென் கரையில் இருக்கின்ற பெரிய பள்ளிக்கூடத்திற்குச் செல்கின்ற தம்பி தங்கைகள், குளத்தின் பாசி நாற்றம் சகிக்காது மூக்கைப் பிடித்துக்கொண்டு செல்கிறார்கள்—வேகமாக ஓடுகிறார்கள்—சிரிக்கத்தக்க காட்சி அது! மூக்கை இறுகப் பிடித்துக்கொண்டு நீரிலே மூழ்கி மூழ்கி எழும் பக்தர்களைக் கண்டு சிரிக்கலாம்! 'இப்படியும் இருப்பார்களா?' என்று சிந்திக்க விரும்பினால் உட்காருவதற்கு இடம் கிடையாது அங்கே! ஏனெனில் நாற்றத்தைச் சகித்துக் கொள்ளும் தன்மை எல்லோருக்கும் இருக்குமா, என்ன?

நடப்போம்...தென் கரையாயிற்று...இது மேலக்கரை...முனை திரும்பினால் வட கரை!...இங்கே தான் நாம் மிக மிக விசித்திரமான காட்சி ஒன்றைக் காண முடியும்!

அதோ...வட கரையிலிருக்கும் படித்துறையில் உட்கார்ந்திருக்கிறாரே ஒருவர், அவர்தான் நம் வியப்புக்குரிய மனிதர்!

யார் அவர்?

"யார், நீங்கள்?"—இந்தக் கேள்வியை யாராவது இப்போது அவரிடம் கேட்டால், அவர் திருக்குளத்தைக் காட்டுவார். "இந்தக் குளத்துக்கு நான்தான் ராஜா!" என்பார் சிரித்துக் கொண்டே! அதற்குப் பின்னால் மறைந்து கிடக்கும் ஏதோ ஒரு சோக வரலாற்றை அந்தச் சிரிப்பு அப்பட்டமாக எடுத்துக் காட்டும்.

ஏன்; அவருக்கு வீடு இல்லையா; மனை இல்லையா; எதற்காக குளத்தங்கரையிலேயே இரவு, பகல் எந்நேரமும் 'தவம்' இருக்கிறார்?

அவருக்கு வீடில்லைதான்; குடிசை இல்லைதான்; ஆனால் மூன்றடுக்கு மாளிகை இருந்தது! திகைக்காதீர்கள்! வட கரையிலே வான்முட்ட எழுந்து—கோபுரத்தோடு போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறதே அது அவரது உடைமைதான்!

கம்பீரமாகத் தோற்றமளித்த 'அரண்மனை' தான் அது; ஆனால் இன்று களையிழந்து சுடுகாட்டுக்கு ஈடாகத் தென்படுகிறது!

காரணம்?

திருக்குளம் புரிந்துவிட்ட திருவிளையாடல்தான் அது!

ஆனால் யாருடைய கண்களுக்கும் புலப்பட்டு விடாத நீசச் சம்பவம் அது!

"கமலா! ... கமலா...! ஓடிவா! ஓடிவா, என் கண்ணே!"—திருக்குளத்தை நோக்கி, இரண்டு கைகளையும் நீட்டி அவர் அழைத்தார். உரத்தக் குரலெடுத்துக் கதறினர்.

குளம் சலனமற்று இருந்தது!

எங்கே இருக்கிறாள் அந்தக் கமலா? யார் அவள்?

கமலா—அந்த மாளிகைக்காரரின் செல்வப் பெண்—காலமெல்லாம் காத்துக் கிடந்தபின் கிடைத்த தங்கக் குழந்தை! அது தான் வெறிச்சோடிருந்த அவரது விசாலமான மாளிகையிலே மகிழ்ச்சியைப் புகுத்தியது! ஆனால் அதே கமலாதான் இன்று அதை வேதனைச் சூழலில் சிக்கவைத்து விட்டது!

அவர் மறந்திருக்க முடியுமா, கமலா பிறந்த தினத்தை எவ்வளவு குதூகலத்தோடு கொண்டாடினர் என்பதை!

"டேய், வேம்பு! ... பந்தல் வாசல்ல வாழை மரம் சாய்ந்திருக்காமே......அதைப்போய் சரியாக் கட்டு!...கும்பகோணம் பஸ் வர்ற நேரமாச்சு—ஓடிப் போய் இருபது கூடை வெற்றிலை வரும்......அதை எடுத்துக் கிட்டு வா!.....மறந்துடாதே வேம்பு; மாயவரத்திலேருந்து சம்பந்தி வீட்ல வாராங்களே — ஸ்டேஷனுக்கு கார் அனுப்பு!....ம்.... போ..."

—இப்படி தொல்லைகள் ஏராளமிருந்தும், அந்த தினத்தை எல்லையில்லா இன்பத்துடன் கொண்டாடினரே!

"டேய்.....வேம்பு! ...குழந்தை முகத்தைப் பார்த்தியாடா; என்ன களையாயிருக்குன்னு...."

வேம்பு — அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான அந்த அடிமை-அவரது வேலைக்காரன் தலைமேல் சுமந்து கிடந்த வேலைகளுக்கு மத்தியில், அடிக்கொரு முறை தொட்டிலுக்கருகே சென்று குழந்தையையும் பார்க்கத் தவறமாட்டான்!

கமலாவிடம் அவனுக்கு அத்தனை பாசம்! அதற்கும் காரணம் இருந்தது!

தாய் தந்தை இழந்த அந்த அனாதைத் தம்பிக்கு தங்கை ஒருத்தி இருந்தாளாம்; அவள் கமலாவைப் போலவே இருப்பாளாம்; எங்கிருந்தோ வந்த ஏழைகளின் வியாதியான காலராவுக்கு அவளைப் பலி கொடுத்து விட்டானாம்; பைத்தியம்போல் கால்போன திசையில் பல காலம் நடந்தானாம்; கடைசியில்தான் இந்த மாளிகைக்காரரிடம் தஞ்சமடைந்தானாம்.

ஆகவேதான் அவனையும் அறியாத ஒரு நேசப் பிணைப்பு அந்தக் குழந்தையிடம் அவனுக்கு ஏற்பட்டது!

பாடிக்காட்ட வேண்டுமா; பாலருந்த வேண்டுமா—கமலாவுக்கு வேம்பு தேவைப்படுவான். மேலும் நீல வானத்து நிலாவைக் காட்டும்போதும், அதைப் பிடித்துத் தா என்று அழும்போது ஆறுதல் சொல்லும் போதும் வேம்பு அனுபவிக்கும் தொல்லை... தூர இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் மாளிகைக்காரருக்கு மகிழ்ச்சியைத் தரும். வேம்புக்கு மட்டுமென்ன? வேதனைதான் என்றாலும்; அவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி அதில்!

ஆனால் வேம்புக்கு மட்டும் ஒன்றைப் பிடிக்கவே பிடிக்காது. தினந்தோறும் காலையில் கமலாவைத் திருக்குளத்தில் முழுகச் செய்வதுதான் அவன் விரும்பாத ஒன்று! "எஜமான்! பூச்சியும் புழுவும் நிறைந்த இந்தத் தண்ணியிலே பாப்பாவை முழுக்காட்டச் சொல்றீங்களே...ஒரே அசுத்தமா இல்லிங்களா?" என்று எத்தனையோ முறை தன் முதலாளியிடம் வாதாடியிருக்கிறான்.

"அடப்பாவி! திருக்குளத்தையா அசுத்த நீருன்னு சொல்றே! டேய், வேம்பு! புண்ணிய தீர்த்தம்டா அது! முட்டாளே; குழந்தை தினம் அதிலே முழுகினா ஆயுள் பலம் உண்டுடா—நூறு வயசுக்கு மேலே வாழ்வா! உனக்கு என்ன தெரியும்? போ...போ...நேரமாயிட்டு... திருக்குளத்துக்கு அழைச்சுக்கிட்டுப்போ கமலாவை!...பாசி வழுக்கிடப் போவுது...ஜாக்கிரதை!..."—இப்படி அவனது வாயைக் கட்டிப் போட்டு விடுவார் முதலாளி!

அசுத்த நீரிலே முழுகினால் குழந்தையின் நலம் கெடும் என்று வாதிட்டான் அவன். ஆனால் அவன் நல்ல பெயர் கெடும் சம்பவம் ஒன்று ஒருநாள் நடந்து விட்டது.

திருக்குளத்திலே நீராடச் செய்து விட்டு கமலாவை வீட்டுக்கு அழைத்து வந்தான் வேம்பு. அன்றாட வேலைகளை வழக்கம்போல் கவனிக்க ஆரம்பித்தான். அப்படி கடைத்தெரு சென்று அவன் மாலையில் திரும்பிய நேரத்தில்தான் அவன் எதிர்பாராத ஒன்று மாளிகையிலே அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

"டேய் வேம்பு!...உன்னை யோக்கியன் என்றல்லவாடா, இத்தனை நாள் எண்ணிக் கொண்டிருந்தேன்! என்ன துரோகம் செய்து விட்டாய்!..."

—முதலாளியின் இந்தக் கோபக் குரல் அவனை வரவேற்றது. வேம்பு கண நேரம் என்னவென்று தெரியாது—செய்வதறியாது சிலைபோல் நின்றுவிட்டான்!

"ஏனடா அசந்துபோய் நின்று விட்டாய்? இரும்புப் பெட்டியிலிருந்து அடுப்பங்கரைவரை தாராளமாகப் பழக விட்டவனுக்குச் செய்த கொடுமை தெரிந்துவிட்டதே—குட்டு உடைபட்டு விட்டதே என்ற திகைப்பா?...நாயே. உண்மையைச் சொல்லி விடு!... இல்லை; உடம்புத் தோலை உறித்து விடுவேன்!..."

"எஜமான்!...நீங்கள்...நீங்கள்... என்ன கேட்கிறீங்க?..." என்று நாக்குழற உளறினான் வேம்பு!

"என்ன கேட்கிறேனா? குழந்தையின் கழுத்திலே கிடந்த தங்கச் சங்கிலியைக் கழட்டிக்கிட்ட அயோக்கியனே, நாளைக்கு அவள் கழுத்தை நெரித்து ஏன் கொன்று போட மாட்டேன்று கேட்கிறேன்டா?..."

கமலாவின் தங்கச் சங்கிலி—

அதை வேம்பு திருடிவிட்டான்!

"ஐயோ...எசமான்!" என்று அலறினான் வேம்பு!

திரும்பிப் பார்த்தான். மாடிப் படிகளின் இடுக்கில் ஒண்டிக் கொண்டு நின்றது கமலா. அதனிடம் ஓடினான். "கமலா! இந்தப் பாரும்மா!...நானு உன் தங்கச் சங்கிலியை எடுத்தேன்?... சொல்லும்மா!..." என்றான். கமலா வாயைத் திறந்து பதில் சொல்லும் வயது வந்ததல்லவே! அந்த மூன்று வயதுச் சிசு நடப்பதென்ன—என்றே புரியாது தவித்தது. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்துவிட்டது; தன் அன்புக்குப் பாத்திரமான வேம்பு ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறான் என்று! அதை உணர்ந்த மறுகணமே "வேம்பூ...வேம்பூ!" என்று அலறிக் கொண்டே அவனைத் தழுவிக் கொண்டது!

"சீ, கழுதை! அவனை விடுடா அயோக்கிய ராஸ்கல்!" என்று அலறினர்; அந்த மாளிகைக்காரர்! வேம்புவின் கண்களில் குபுகுபுவென்று கண்ணீர் ததும்பியது!

"திருட்டு நாயே! உண்மையைச் சொல்லி உடனே நகையை எதிரே வைக்கிறியா? அல்லது போலீசைக் கூப்பிட்டு உள்ளே தள்ளட்டுமா?"

—யோசிக்க நேரமற்றுப் போய் விட்டது அந்த எஜமானருக்கு!

வேம்பு — இத்தனை நாட்களாக வீட்டில் ஒருவனாக வாழ்ந்தவனாயிற்றே; நல்ல செயல்களால் நம்பிக்கை பெற்றவனாயிற்றே; அவனா செய்திருக்க முடியும் இந்த அக்கிரமத்தை என்று அவர் யோசிக்கலாம், ஒரு கணம்! பணம் படைத்தவர் — பவிசோடு வாழ்பவர் — இயற்கையான கோபம் — இவை அந்தப் பொறுமையை அவரிடமிருந்து தூர விரட்டியது!

"எசமான்! என்னை உங்க காலடியில் கொன்று போட்டு விடுங்கள், விருப்பமிருந்தால்! அதற்காக இப்படி அபாண்டத்தைச் சுமத்தாதீர்கள்!"—ஆத்திரத்தில் அலறினான் வேம்பு!

"எதடா அபாண்டம்?" என்று பாய்ந்தார் மாளிகைக்காரர். அவர் கையிலிருந்த பித்தளை பூண் போட்ட பிரம்புத்தடி அவன் முதுகிலே பாய்ந்தது! கோபம் உந்தித் தள்ள அவனைத் தாக்கினர்.

[தொடர்ச்சி பக்கம்—10]

மரணப் படுக்கையிலே காங்கிரஸ்!

'மருத்துவர்' மனமொடிகிருர்!

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

நான் பிறந்த மாநிலத்திலுமா இந்தக் கொடுமை? — நேரு தேபரைப் பார்த்துக் கேட்கிருர்.

இறுதியில் இருவர் முகங்களும் சோபை இழந்து—சோடையாகி விட்டது செழித்திருக்க வேண்டிய காங்கிரஸ், என்ற உண்மையைத்தான் மௌனமாக ஒப்புக் கொள்ளுகின்றன.

ஒட்டளிப்பதில் ஒத்துழையாமை நடத்தி, காங்கிரசாரே தங்களது வெறுப்பைக் காட்டிக் கொண்ட நிகழ்ச்சி உத்தரப் பிரதேசத்தில் மட்டுமல்ல; ஒரிசாவிலும் நடைபெற்றிருக்கிறது.

ஒரிசா சட்டசபையின் மொத்த உறுப்பினர்கள் 137 பேர். அதில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 70 பேர். அந்த 70 வாக்குகளை நம்பி—நிச்சயம் வெற்றி கிடைக்கத்தானே வேண்டும் என்ற உறுதியுடன் இரண்டு அபேட்சகர்களை டெல்லி மேல் சபைக்கு நிறுத்தி வைத்தது காங்கிரஸ்!

ஆனல் எதிர்பார்த்த முடிவு இல்லை—இருவரில் ஒருவர் தோற்கடிக்கப்பட்டார்!

காரணம் என்னவென்று கணக்கிட்ட நேரத்தில்தான், 5 காங்கிரஸ் உறுப்பினர்கள் காலை வாரிவிட்டது கண்டு பிடிக்கப்பட்டது! அந்த 5 பேர் திசைமாறிவிட்ட காரணத்தால் ஒரு காங்கிரஸ் அபேட்சகர் தோற்ருர்; 11 உறுப்பினர்களை மட்டுமே சட்ட மன்றத்தில் கொண்டிருக்க ஒரு எதிர்க்கட்சியின் அபேட்சகர் வெற்றி பெற்ருர்!

இப்படிப் பக்கத்திலே இருந்து குழி பறிக்கும் பண்பு—ஆளும் கட்சிக்குத் துரோகம் இழைக்கும் இழிகுணம்—ஏன் ஏற்பட்டது?

காங்கிரஸ் கலகலத்து விட்டது; சூதுக் கூடாரமாக மாறி விட்டது — என்பதை தேபரே ஒப்புக் கொள்ளுகிருர். அத்துடன், இப்படிக் கட்சிக் கட்டுப்பாட்டைக் குழி தோண்டிப் புதைப்பவர்களின்மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்திருக்கிருர்.

5—4—58 அன்று, புதுடெல்லியிலே அவசர அவசரமாகக் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி இந்தத் தீர்மானத்தைத் தீட்டியிருக்கிறது.

"காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு இனி புத்துயிர் ஊட்ட வேண்டும்—அதிலே சேவா உணர்ச்சி பெருக வேண்டும் — கடுமையான கட்டுப்பாடும் புகுத்தப் வேண்டும்..."

வழக்கம்போல் இந்த வரட்டு புத்திமதியைத்தான் மீண்டும் தர முடிகிறது என்ருலும், வளர்ந்து வருகின்ற அழிவு சக்தியை காங்கிரசை விட்டு விரட்ட முடியுமா?

"முடியாது" என்று பதில் சொல்லுகிறது, இன்று தலைமைப் பீடத்தால் வேண்டாதவர்கள் என்று விரட்டி அடிக்கப்பட்டவர்கள் விடுகின்ற சவால்!

பஞ்சாப் காங்கிரசிலே நடைபெற்ற பரிகசிக்கத் தக்க சம்பவம் இது!

தேவலால் என்பார் பஞ்சாபிலே காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவர்—பணம் படைத்த திமிங்கிலம்!

சென்ற பொதுத் தேர்தலின் போது அவருக்கு காங்கிரஸ் 'டிக்கெட்' தரப்படவில்லை. அவர் பல வழிகளில் முயற்சித்தும் மேலிடம் பிடிவாதமாக மறுத்து விட்டது அவர் ஒரு லஞ்சதாசர் — ஊழல்களுக்கு வித்திடும் உலுத்தர் — அவர் சட்ட மன்றத்திற்கு வருவதே மாபெரும் இழுக்கு—என்றெல்லாம் அதற்குக் காரணங்கள் காட்டப்பட்டன!

அப்படி தலைமைப் பீடத்தாலே வெறுக்கப்பட்டவர்—காங்கிரசின் மாசு என்று ஒதுக்கப்பட்டவர் எங்கே சென்றிருக்க வேண்டும்?

மாற்றுக் கட்சிக்குச் சென்றிருப்பார்; அல்லது அரசியலையே விட்டு விலகி அஞ்ஞாதவாசம் மேற்கொண்டிருப்பார்—என்றுதானே கருதுகிறீர்கள்?

இல்லை...இல்லை!...

இன்று அவர் பஞ்சாப் மாநில காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்!

தேர்தலில் விரட்டிய அவரை கட்சிக்குள் பொறுப்புள்ள இடத்திலும் நுழையவிடக் கூடாது என்பதற்காக தேபரும் நேருவும் எவ்வளவோ பாடுபட்டார்களாம்! ஆனல் அனைத்தையும் பணத்தால் முறியடித்து—இலட்ச ரூபாயுக்குமேல் செலவிட்டு—மாநில காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி வெற்றிப் புன்னகை வீசுகிருர். தேர்தல் டிக்கெட் தர மறுக்கப்பட்ட அந்த 'குற்றவாளி'!

தேபரின் முகம் தேய்பிறையாகி விட்டது!

மேலிடத்துக் கண்களுக்கு மண் தூவி, அப்படிப்பட்ட 'குற்றவாளி'கள் தெரிந்தோ தெரியாமலோ காங்கிரசில் நிறைய மலிந்துவிட்ட காரணத்தால்தான்— டில்லி நகரசபைத் தேர்தலில் வரலாற்றிலேயே முதல் தடவையாக படுதோல்வி அடைந்திருக்கிறது காங்கிரஸ்!

நாற்பத்தாறு கோடி இந்திய மக்களின் வாழ்வை நிர்ணயிக்கும் தலை நகரம் — மத்திய அமைச்சரவை செயலாற்றும் இடம்—அமைச்சர்கள் அத்தனை பேரும் அன்ருடம் நடமாடுகின்ற பகுதி—அங்குதான் காங்கிரஸ் 49 இடங்களை எதிர்க் கட்சிகளுக்குத் தத்தம் செய்து 31 இடங்களை மட்டுமே பெற்று, நகரசபையை இழந்து தவிக்கிறது!

"காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே இருக்கும் மனக் கசப்பினுல்தான் தங்கள் கட்சியைத் தாங்களே வீழ்த்திக் கொண்டனர்!"

—டெல்லி பரிதாபம் குறித்து மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் இப்படி அறிவிக்கிருர்.

இதைவிட மோசமான நிலைமை இப்போது தெற்கே நிலவி வருகிறது!

மைசூரிலும், ஆந்திராவிலும் இப்போது இருக்கின்ற காங்கிரஸ் சர்க்காரின் முதல் அமைச்சர்களின்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து கவிழ்த்துவிட முயற்சிகள் நடைபெறுகின்றன.

இந்தச் செயலில் முழு மூச்சோடு ஈடுபட்டிருப்பவர்கள் வேறு யாருமல்ல; காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களே தான்! கையெழுத்து வாங்கும் கட்டம் அதிவேகமாக நடந்து வந்த நேரத்திலேதான் "கையெழுத்து வாங்காதே! கண்ணியத்தை மீருதே!" என்று தேபர் அங்கிருந்து அலறிஞர்.

ஆனலும் புகை அடங்கவில்லை!

187 பேரை காங்கிரஸ் உறுப்பினர்களாகக் கொண்ட மைசூரில் 123 பேர் முதல்வர் நிஜலிங்கப்பாவுக்கு எதிர் அணியிலே நிற்கிருர்கள்!

அந்த கவிழ்க்கும் கும்பலுக்குத் தலைவர்களாக இருக்கும் இருவரும் மாஜி முதல்வர்கள். ஒருவர் கடிதால் மஞ்சப்பா—மற்றவர் கே. அனுமந்தய்யா!

இப்படி இந்திய உபகண்டம் முழுவதிலும், ஆழ ஊன்றப்பட்ட காங்கிரசின் வெற்றிக் கொடி ஆடி அசைந்து கீழே சாயும் அவல நிலைக்கு ஆளாகி விட்டது!

புண் புரையோடி விட்டது!

காங்கிரஸ் மரணப் படுக்கையிலே கிடக்கிறது!

ஆகவேதான் 'மருத்துவர் மன மயக்கம்' கொள்கிருர்!

இந்திய உபகண்டத்தில்—பரிதாபத்திற்குரிய காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த ஒரே ஒரு மருத்துவர் பண்டித நேருதான்!

அந்த மருத்துவரும் காங்கிரசைப் பீடித்துள்ள தீராத நோய் கண்டு திகைக்கிருர்!

திரும்பும் திசையெல்லாம் மரண ஓலம்—அவர்தான் என்ன செய்வார்? பைத்தியம் பிடித்து விடுமோ என்று அஞ்சுகிருர்! பரிதவித்து நிற்கிருர்!

அவருக்கு வாய்த்த 'நர்சா'ன தேபரோ பெரிய கோழை—நோயைக் கண்டு கண்ணீர் வடிக்கிருர்!

அவர் மட்டும் கண்ணீர் வடிக்கவில்லை!

அதோ, தாயக விடுதலைக்கு விலையாக இரக்கமற்ற தூக்குக் கயிறுக்கு தன் உயிரைப் பலி கொடுத்த பகவத் சிங்கின் ஒப்பற்ற தியாகம் கண்ணீர் சிந்துகிறது!

அடிபட்ட நேரத்திலும் கொடி உயர்த்தி — அடிமைப்பட்ட நாட்டின் விடுதலைக்குத் தடையின்றி கூவி தந்த திருப்பூர் குமரனின் சமாதி கண்ணீர் சிந்துகிறது!

செக்கிழுத்து செங்குருதி சிந்திய சிதம்பரம்—உத்தமர் காந்தியின் உயிர் காக்க பாய்ந்துவரும் குண்டுக்கு மார்பு காட்டிய தில்லையாடி வள்ளியம்மை — இன்னும் வெளி நாட்டானை வெளியேற்ற வெஞ்சமரில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கான வீரர்களின் தொண்டுள்ளம் கண்ணீர் விடுகிறது!

பெருக்கெடுத்து ஓடிவரும் அந்தக் கண்ணீர் வெள்ளத்திலே காங்கிரஸ் கரைந்து விடுமா? அல்லது உள்ளூர அரித்துவரும் விஷ நோயுக்கு இரையாகிவிடுமா?

ஏதும் புரியாத மருத்துவர் மனமயக்கம் கொண்டு விட்டார்!

குறை கண்டு நிறைபெற விரும்புகிருேம்!

"சிறு வியாபாரிகளுக்கு உதவுவதில் எதிர்க் கட்சிகள் ஆவல் கொண்டிருக்கின்றன. அவர்கள் இந்த விற்பனை வரி போன்ற வரிகளால் தொல்லையுராமலிருக்கவும், வரிச் சுமைகளால அவதிப்படாமலிருக்கவும் முடிந்த வரை எதிர்க்கட்சிகள் பாடுபடும். ஆனல், நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்கள் கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நாங்கள், சட்ட மன்றத்தில் மிகக் குறுகிய சிறுபான்மையினராக இருக்கின்ருேம்.

"குழம்பிய குட்டையில் நாங்கள் மீன் பிடிக்க விரும்புவதாகவும், சிறு வியாபாரிகளின் அனுதாபத்தைத் தங்கள் கட்சி நலனுக்குப் பெற விரும்புவதாகவும் எதிர்க் கட்சியினர்மீது குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனல் நான் சொல்லுவேன்—நாங்கள் சிறு வியாபாரிகளுக்காக ஆதரவு காட்டுகிருேம் என்ருல் அதற்குக் காரணம், அவர்களுடைய குறைகள் நியாயமானவை என்பதாலும், அவற்றை சட்ட மூலமாக அமைதியாக நிவர்த்திக்க முடியும் என்பதனுலும்தானே தவிர, வேறல்ல!

"மேலும், ஜனநாயக அமைப்பில், அடக்கி ஒடுக்கப்படுகிறவர்களுடைய—அவதிப்படுகிறவர்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டியது எதிர்க் கட்சிகளுடைய கடமையுமாகும்.

—அறிஞர் அண்ணு

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6.